உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ”—திருவள்ளுவர்.

தொகுதி 9 } இரக்தாக்ஷி௵ சித்திரை௴ ௧௳
1924௵ ஏப்ரல்௴ 13௳. { பகுதி 10

கடவுள் வணக்கம்.

பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சநக னாதிமுனி வோர்கடம்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த சித்தவரு ளியல்ப தாகவுள
சோம சேகர கிர்பாளுவாய்
தென் முகத்தின்முக மாயி ருந்தகொலு
வெம்மு கத்தினும்வ ணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே. (1)

எனக்கு முனக்கு முறவில்லை யெனத்தேர்ந்தே
நினைக்க வரிதான வின்பநிட்டை—தனைக்கொடுத்தே
யாசான் மவுனி யளித்தானெஞ் சேயனையோர்
காசா மதியேனுன் காண். (2)

எல்லாமே மோனநிறை வெய்துதலா லெவ்விடத்து
நல்லார்கண் மோனநிலை நாடினர்—சொல்லாத
நானெனவிங் கொன்றை நடுவே முளைக்கவிட்டிங்
கேனலைந்தேன் மோனகுரு வே (3)

அரும்பொருள் விளக்கம்.

1. பன்முகம்=(ஒன்றுக்கொன்று மாறுபட்ட) பலவிதங்களையுடைய.

சமயநெறி படைத்தவரும்=சமய மார்க்கங்களை யுடையவர்களும்.

வாததர்க்கமிடு படிறர்=(உண்மையறிவதற்காகச் சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருத்தமானபடி தர்க்கித்து உண்மையை யேற்றுக்கொள்வதைவிட்டு, தாம் கூறுவதையே சாதிப்பான் கருதி) குதர்க்கமாகிய விதண்டா வாதம் செய்யும் சுபாவமுடைய வஞ்சகர்களும்.

தலைவணங்கிட=(மறுக்கமுடியாது நாணத்தோடு) தலைவணங்கித்தொழ

தன்முகத்தில்=தன்னிடத்திற்கு

உயிர்வர அழைக்கும்=உயிர்களெல்லாம் வரும்படிச் செய்யும்.

பகடு மேய்க்கி=எருமை மேய்ப்பவன்.

தனியிருப்ப=(செயலற்று) ஒரு புறம் நிற்க.

வடநீழலுறுவளர்=கல்லால விருட்சத்தின் கீழ் இருக்கும்.

ஜநகனுதியர்=ஜநகர், ஜநத்குமாரர், ஜநந்தனர், ஜநாதனர் ஆகிய நான்கு மகாரிஷிகள்.

அங்கைகொடு மோன ஞானமது உணர்த்தி=சின்முத்திரைக் கரத்தால் மோனமாகிய ஞானநிலையை யுணர்த்தி.

அருள் இயல்பதாகவுள=அருளே திருமேனியாகவுடைய.

சோமசேகரகிர்பாளு=சந்திரனைச் சிரசில் தரித்த கிருபாமூர்த்தி.

தென்முகத்தின் முகமாய் இருந்த கொலு=தக்ஷிணாமூர்த்தியாக வெழுந்தருளியிருந்த கொலுவினை.

எம் முகத்தினும் வணங்குவேன்=எந்தத் திக்கிலும் அச் சொரூபமே புளதாகப் பாவித்து வணங்குவேன்.

தெரிவதற்கரிய=ஒருவராலும் அறியவொண்ணாத.

"பன்முகச் சமயநெறிபடைத்தவர்" என்பது, சர்வமதங்களாலும் பிரதிபாதிக்கப் படுபவர் ஒரே கடவுளென்பதையும், அவர் சமயாதீதர் என்றும், ஒரு சமயக்கட்டுக் குட்பட்டவரல்லவென்றும் உணராது, என் சமயம் மெய், உன் சமயம் பொய், என்று பேதபுத்தி கொண்டு வாதமிட்டலையும் பல்வேறு மார்க்கங்களையுடைய திமிர சமயவாதிகளைக் குறிக்கிறது.

"யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்" என்பது, "நானே பிரம்மம்' அதாவது 'இந்த வியஷ்டி ஆன்மாவே பிரம்மம்' என்று உணர்வதே முத்திநிலை என்ற கொள்கையுடையோரைக் குறிக்கிறது. அவ்வாறு கூறுவது அகங்காரமாதலாலும், அது பாதகச்செயலாதலாலும் அவர்களைப் பாதகத்தவர் என்றனர்.

"அகம் பிரம்மாஸ்மி" (உள்ளம் பிரம்மமாயிருக்கிறது) என்று வேதம் கூறியது. "ஆன்மா பிர்ம்மத்தைப்போலவே சச்சிதானந்த சொரூபமுடையது-இரண்டும் ஒரு இனமே" என்று உணர்வதற்கேயன்றிவேறில்லை. இரண்டும் ஒரு இனமே யென்றறியாவிடில், (குடநீர் கடல் நீரில் கலந்து கடலேயாவதுபோல்) ஆன்மா பிரம்ம சொரூபத்தோடு கலந்து பிரம்மமே யாகும் என்பதில் ஐயமுண்டாகும். 'ஆன்மாவாகிய நீயே பிரம்மம், வேறு பிரம்மமில்லை' என்ற பொருளில் வேதம் கூறியிருக்குமாயின், ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வொரு பிரம்மமாகி முடிவில் எண்ணிறந்த பிரம்மங்களாகி விடும். மேலும் அப்படி அர்த்தம் கொள்வதாயின் "தத்வமசி" (அது நீயாகிறாய்) என்ற மகாவாக்கியம் எழக்காரணமில்லை. நாம் மோக்ஷமடையப் பக்தியவசியமென்பதும் வேண்டியதில்லை. அவனருளைப் பெறவேண்டும் என்ற எண்ணமே வேண்டியதில்லை. உண்மை "பிரம்மத்தை யன்றி ஆன்மா வேறுயில்லை" என்பதாம்.

வேதத்திலுள்ள நான்கு மகா வாக்கியங்களும் ஒரு முடிவை ஐயமின்றிக் காட்டவெழுந்தவை. அவற்றில் சாமவேதம் சாந்தோக்கிய உபநிடதத்துள்ள "தத்வமசி" மகாவாக்கியமே முடிவான அநுபவத்தைக் கூறுவது. ஆதலின் ஒன்றைமட்டும் எடுத்துக்கொண்டு அதையே முடிவான பொருளாகக் கொள்வது தவறாகும்.

"என்று மிருந்த படியிருக்கு மியல்பே யென்னு மொருவேதம்
ஒன்றே யொழிய விரண்டாம்வத் தில்லை யென்னு மொருவேதம்
வென்றிப் பரமும் நீயும்வே றில்லை யென்னு மொருவேதம்
துன்று மதுவே நீயாறு யென்றே சொல்லு மொருவேதம்."

(வள்ளலார்)

தக்ஷிணாமூர்த்தி ஞானகுரு. "தக்ஷிணாமூர்த்தி" என்றால் "தெற்கு நோக்கியபடி யிருப்பவர்" என்பது பொருள். அவர் எச்சமயத்தவர்க்கும் பொதுவானவர். சமயாதீதர். அவர் காட்டும் மோக்ஷ நிலையும் எச்சமயத்தவரும் அடையத்தக்கதே. அதனாலே அவர் யாவரும் வணங்கற்குரியவர் என்றார். அவர் காட்டும் நிலை மரணம் பிறப்பற்ற நிலையாதலாலும் அந்த நிலையில் இருப்பவர்களிடம் எமனுக்கொருவேலையு மில்லையாதலாலும் எமனை 'எருமை மேய்ப்பவனாய்த் தொழிலற்று ஒரு பக்கம் இருப்பான்' என்று கூறினார்.

2. நெஞ்சே = ஓ மனமே! (எனக்கும் உனக்கும் உறவில்லை.)

ஆன்மா தாதான்மியத்திரியங்களால் மயங்கி மனதோடு கலந்து அதன் தொழில்களை யெல்லாம் தன் தொழில்களாகக் கருதி இடர்ப்படுகிறதே யன்றி உண்மையில் மனதிற்கும் ஆன்மாவிற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஆன்மா சத்து சித்து. மனம் அசத்து ஜடம். ஆன்மா மனதை வேறு பிரித்தறிந்து நிராகரித்துவிடக்கூடும். அதனால் மனமே உனக்குமெனக்கும் உறவில்லை யென்று தெளிந்தேன் என்றார்.

மனதை யொடுக்கியபின்பே நிட்டை கைகூடும். அதன்பிறகு மனம் தலையெடுத்தாடாது. ஆகையால் சற்றும் உன்னை மதிக்கமாட்டேன் என்றார்.

மனம் மடிந்து ஞானநிட்டை கைவந்தவிடத்துண்டான ஆனந்தத்தால் மனதை நோக்கி அவ்வாறு கூறினார்.

"மனம்வேறு, நாம் என்ற ஆன்மாவேறு என்றுணர்ந்தால்தான் மனதை யடக்கமுடியும். அப்போதுதான் நிட்டைகூடும்" என்று இது உணர்த்துகிறது.

3. எல்லாமே மோன நிறைவு எய்துதலால்=சகலமும் முடிவில் மோன நிலையாகிய முத்தி நிலையை அடைவதால்.

நல்லார்=அறிவாளிகளாகிய முமுட்சுக்கள்.

மோனநிலை நாடினார்=அந்த மெய்ஞ்ஞான நிலையை யடைய முயன்றார்கள்.

(ஆனால் நானோ)

பொல்லாத நான் என ஒன்றை=பொல்லாங்கை விளைவிக்கும் "நான்" என்கிற அகங்காரத்தை.

இங்கு நடுவே முளைக்கவிட்டு=இங்கே மத்தியில் உண்டாக்கிக்கொண்டு.

அலைந்தேன்=(பிறப்பிறப்பாகிய துன்பங்களில் இதுகாறும்) அலைச்சற்பட்டேன்.

'பொல்லாத நான்' என்பதை பெயரெச்சத் தொடராகப் பொருள் கோடலினும், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாகக்கொண்டு "பொல்லாததை விளைவிக்கும் நான்" என்று பொருள் கோடலே பொருத்தமாகும். பின்னால் "நான் என்ற ஒன்றை" என்று வருவதனாலும் இது நன்கு விளங்கும்.

'நான்' என்கிற அகங்கார கிரந்தியே பிறப்பிறப்பிற்குக் காரணமாகையால் இவ்வாறு கூறினார்.

தாயுமானவரே மற்றோரிடத்தில் "நான் நான் எனு மகந்தை இங்கெனக்கேன் வைத்தாய்" என்று கூறியுள்ளதையும்,

"நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் ஜகமாயை நானாவாகித்
தான்வந்துதொடருமித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்றவல்லார்
* * * * "

என்ற பாசுரத்தையும் ஈண்டு கவனித்துணர்ந்தால் மேல்கூறப்பட்ட பொருளே சுவாமிகளின் கருத்தெனவறியலாம்.

ஆனந்தபோதினி

இரக்தாட்சி௵ சித்திரைமீ ௧௳

தேசக்ஷேமம்.

ஒரு தேசம் க்ஷேமமா யிருக்கிறது என்றால், அத்தேசத்தி லுள்ளோர் உலகவாழ்க்கைக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் பூரணமாகப் பெற்று சுகதேகிகளாய் வியாகூலமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே பொருளாகும். மனிதருடைய வாழ்க்கைக்கு முக்கியமாய் வேண்டியவை. (1) உணவுக்கு வேண் டிய பலவகைப் பொருள்கள், (2) உடுக்க ஆடைகள், (3) ஆபர ணங்கள், வசிக்க வசதியான இடம் முதலிய இவைகளே.

1. உணவுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் பூமியிலிரு ந்தே உற்பத்தியாகவேண்டும். பால், தயிர், நெய் இவைமட்டும் ஆடு மாடுகளிலிருந்து உற்பத்தியாகிறவை.

2. உடைக்கு வேண்டியவற்றில் பருத்தி முக்கியமானது. அதுவும் பூமியிலிருந்தே உற்பத்தியாகவேண்டும். கம்பளி ஆடு முதலிய மிருகங்களின் உரோமத்தால் செய்யப்படுகிறது.

3. ஆபரணங்களுக்குப் பொன் வெள்ளி முதலிய உலோகங் களும் நவரத்தினங்களும் வேண்டும்.

இவையன்றி வாசம்செய்ய வீடு கட்டவும் சாமான்கள் செய்து கொள்ளவும் அவசியமான விருட்சங்கள் முதலியவை ஏறக் குறைய எல்லா நாடுகளிலும் கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டே யிருக்கின்றன.

ஆகையால் மேல்கண்ட பொருள்களெல்லாம் எந்தத் தேசத் தில் போதுமான வரையில் கிடைக்கின்றனவோ அந்தத் தேசம் க்ஷேமமாக விருக்கிறதென்றே கருதலாகும்.

சாதாரணமாய் உலகில் ஒருவனிடம் பணம் அதிகமாகவிருந்தால் அவனுக்கொரு குறையுமில்லையென்று கூறுகிறார்களே, அதுவுமன்றி "பணம் பத்தெட்டும் செய்யும்" என்று பழமொழியேயிருக்கிறதே என்று கேள்வி பிறக்கலாம். இவ்வாறு கூறுவது உண்மையே. ஆயினும் பணம் நேராக க்ஷேமத்தை யளிக்காது. க்ஷேமத்திற்கு அவசியமான மேற்கண்ட பொருள்களை வாங்குவதற்குப் பணம் உபயோகப்படுமேயன்றி பணம்மட்டும் ஒரு பிரயோசனமுமில்லை. ஆதிகாலத்தில் ஒரு பண்டத்தை யளித்து, வேண்டிய மற்றொரு பண்டத்தை வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது பணம் எதை வாங்குவதற்கும் ஒரு பொதுமாற்றுப் பொருளாக விருக்கிறது. பாலைவனத்தின் மத்தியில் சிக்கிக்கொண்ட ஒருவனிடம் கோடி ரூபா பெறும்படியான நவரத்தினங்கள் இருந்தாலும் என்ன பயன்?

இப்போது மனிதர் க்ஷேமமாக வாழ்வதற்கு அவசியமான பொருள்கள் இன்னவையெனக் கூறினோம். இனி நமது நாட்டில் அப்பொருள்கள் கிடைக்குமா என்பதைப்பற்றி கூறுவாம்.

1. தானியங்களில் நெல், கோதுமை, கடலை, துவரை, பயறு முதலிய நவதானியங்களும் நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. பழவர்க்கங்களில் முதன்மைபெற்ற மா, கதலி, பலா முதலியவையும் இன்னும் உஷ்ணகாலத்திற்குச் சுகமளிக்கும் தெங்கு, தர்ப்பூசனி, கிச்சிலி முதலிய பல்வகைக் கனிகளும் நம் தாய்நாட்டில் உற்பத்தியாகின்றன. இவ்விஷயத்தில் நம் நாடு ஒப்புயர்வற்றதென்பதில் சற்றும் ஐயமில்லை. ஆடு மாடுகளும் நம் நாட்டில் வேண்டியமட்டு முண்டு.

2. உடைக்கு வேண்டிய பருத்தி முதலியவைகளும் நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. கம்பளி யளிக்கத்தக்க மிருகங்களும் நம் நாட்டிலில்லாமலில்லை. சாயம் போடுவதற்கு வேண்டிய அவுரி முதலியவைகளும் இங்கு உற்பத்தியாகின்றன.

3. ஆபரணத்திற்கு வேண்டிய பொன் முதலிய உலோகங்களும் இரத்தினங்களும் கூட நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. நமது கடல்களில் விளையும் நல் முத்துகள் உலகப் பிரசித்தி பெற்றவை.

மேல்நாடுகள் செல்வம் மலிந்தவையா யிருக்கின்றன. ஆனால்

ஒவ்வொரு நாடும் வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப்பொருள் முதலியவற்றைப் பணம் கொடுத்து அன்னிய நாடுகளிலிருந்தே தருவித்துக்கொள்ளவேண்டும். ஆதலின் ஒவ்வொரு நாடும் அந்நிய நாடுகளின் தயவை யெதிர்பார்த்தே தீரவேண்டும். நம் நாட்டிலுள்ள அடவிகளிலும் மலைகளிலும் சந்தனம், தேக்கு, செம்மரம், வேங்கை முதலிய உயர்தர விருட்சங்களும், ஔஷதத்திற்கு வேண்டிய ஏராளமான மூலிகைகளும் வித்து வகைகளும் உற்பத்தியாகின்றன. நம் தாய்நாட்டில் உற்பத்தியாகும் மேற்கண்ட பொருள்களனைத்தும் மேல் நாடுகளில் ஒன்றிலேனும் கிடையா. ஆகையால் நாம் எந்த அன்னிய நாட்டின் உதவியையும் எதிர் பாராமலே க்ஷேமத்தோடு சீவிக்கலாம்.

உண்மை யிவ்வாறிருக்க, நமது தாய்நாடு, நீர்வளம் நிலவளத்தில் இணையற்ற நன்னாடு, க்ஷேம நிலையைப் பொருந்தியிராததன் காரணம் என்ன? எப்போதுமே இந்த நிலைமையிலா யிருந்தது? இல்லை யில்லை. நம் நாட்டில் எப்போதும் உணவுக்கு வேண்டிய தானிய வகைகளும் மற்றவைகளும் ஏராளமாகவே உற்பத்தியாகிக்கொண்டிருந்தன. 1900-வது வருடம்கூட இதே சென்னையில் முதல்தரமான சிறுமணி சம்பா அரிசி 1 ரூபாய்க்கு எட்டு, ஒன்பது படிகள் வீதம் கிடைத்துவந்தது. மற்றப் பண்டங்களும் அவ்வாறே மலிவாயிருந்தன. இப்போது இத்தகைய அநீத நிலைமைக்கு வந்திருக்கக் காரணம் என்னையோ? இப்போதென்ன மழையேயாமலேபோய் தானியங்கள் பயிரிடப்படாமலே யிருக்கின்றனவா? இல்லையே. அப்படி யிருந்தும் எல்லாப் பண்டங்களும் விலையேறி ஜனங்கள் உணவிற்கே திண்டாடவேண்டி யிருப்பானேன்?

நம் நாட்டு நிலைமையில் இன்னொரு பெரிய அதிசயம் இருக்கிறது. நம் நாடு மிக்க பரிதாபமான நிலைமையிலிருப்பதே பிரத்தியட்ச உண்மை. அப்படி யிருக்க முன் இருந்ததை விட மிக்க க்ஷேமமான நிலைமையிலிருக்கிறதென்று வெளிநாட்டாரனைவரும் உணரும்வண்ணம் பறையறையப்படுகிறது. இதை நிரூபிக்கும் மாதிரி மிக்க விசித்திரமானது. நம் நாட்டிலிருந்து அனேக இலக்ஷம் ரூபாய் பெறும்படியான சரக்குகள் வெளிச் செல்கின்றன வென்றும், அனேக இலக்ஷம் ரூபாய் பெறும்படியான சரக்குகள் வெளிநாட்டிலிருந்து வருகின்றன, அதாவது ஏற்றுமதி இறக்கு

மதி சரக்குகளின் கிரையத் தொகை இப்போது விருத்தியாகி யிருப்பதால், தேசம் க்ஷேமமடைந்திருக்கிறது என்று கூறப்படு கிறது. உண்மையில் இந்த ஏற்றுமதி இறக்குமதி விஷயமே நம் தேசம் தரித்திர தசை யடைந்திருப்பதற்கு உண்டாகிய காரணங் களில் ஒன்ருகும்.

ஒரு வர்த்தகன் தினம் நூறு ரூபாய் சரக்கு விற்ருன், நூறு ரூபாய் சரக்கு வாங்கினுன் என்று வைத்துக்கொள்வோம். விற்றதாலும், வாங்கியதாலும் அவனுக்கு இலாபமாகவிருந் தால்தான் அவன் அந்த வர்த்தகத்தால் க்ஷேமப்படுகிருன் என லாம். மேற்கண்ட விஷயமோ அப்படியில்லை. அந்த ஏற்றுமதி இறக்குமதிகளால் நம் நாட்டிற்குப் பல தீங்குகளும், வீணுன பொருள் விரையமும் உண்டாக, அவற்ருல் நல்ல இலாப மடை கிறவர்கள் அன்னிய நாட்டாராகவே யிருக்கிருர்கள்.

ஒரு திருட்டாந்தம் கூறுகிருேம். நம் நாட்டிலிருந்து 10 இலக்ஷம் ரூபா பெருமான பருத்தி இங்கிலாந்திற்கு அனுப்பப்படு கிறது; 60 இலக்ஷம் ரூபா பெறுமதியுள்ள துணிகள் அங்கிருந்து வருகின்றன என்று வைத்துக்கொள்வோம். இதனுல் யாருக்கு இலாபம், யாருக்கு நன்மை என்பதைக் கவனிப்போம்.

இந்தப் பருத்தியை மேல்நாட்டு வர்த்தக சங்கத்தார் ஆங் காங்கு தங்கள் காரியஸ்தர்களை வைத்து வாங்கிக்கொண்டு போவ தால் கொஞ்ச நஞ்சம் மிச்சமிருக்கும் பஞ்சிற்கு விலை யதிகமாகி விடுகிறது. இதனுல் இங்கு நெய்யப்படும் நாட்டுச் சேலைகள் முத லியவையும் விலையேற்ற மடைகின்றன. நம் நாட்டிலுற்பத்தியான பஞ்சே வெளிநாட்டிலிருந்து துணியாய்த் திரும்பிவந்தபோது அதற்கு அதிக விலைகொடுத்து வாங்குகிருேம். இத்தகைய விஷ யங்களால் இலாபம் பெறுபவர்கள் அன்னிய நாட்டாரேயன்றி நாமல்ல. அப்பஞ்சு நம் நாட்டில் துணியாகச் செய்யப் படாததால் இங்குள்ள அனேகர்க்குப் பிழைப்பில்லாதுபோவதோடு அதனுல் வரும் இலாபமும் அன்னிய நாட்டாரே யடையநேர்கிறது.

இனி நம் நாடு மற்றெல்லா நாடுகளிலும் செழுமையான தென்பதும், வேறொருநாட்டின் உதவியைக் கோராமலே நாம் சகல சௌகரியங்களோடும் சீவிக்கக்கூடிய வண்ணம் நம் நாடு சகல பொருள்களையும் அளிக்குமென்பதும் வெளிப்படையாய்

யாவரும் அறிந்தவிஷயமே. அப்படியிருக்க நம் நாடு இப்போதேன் இத்தகைய நிலைமையிலிருக்கவேண்டும்? இதற்குக் காரணங்களிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவற்றைக் கூறுகிறோம்.

1. நம் நாட்டில் இப்போது நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களுக்குப் போதுமான தானிய வகைகள் பயிர் செய்யப்படுவதில்லை. ஏனெனில் விவசாயிகளுக்குக் கல்வியின்மையால் நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்காக நாம் இன்னவற்றை யுற்பத்தி செய்யவேண்டுமென் றுணரும் ஆற்றல் அவர்களுக்கில்லை. ஆதலின் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிக பணம் கிடைக்கக்கூடியவையாகிய (வெல்லம் உண்டாகும்) கரும்பு, மணிலாக் கொட்டை, பருத்தி, அவுரி, சணல் முதலியவற்றையே யதிகமாய்ப் பயிர்செய்கிறார்கள். நெல், கம்பு, கேழ்வரகு, வரகு, சோளம், மற்ற நவதானியங்கள், ஆமணக்கு இவற்றைப் போதுமானபடி பயிர் செய்வதை விட்டுவிட்டார்கள். இப்படியவர்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மேல்நாடுகளுக்குச் சென்று வேற்றுருவாய் மாறி, சீட்டுத்துணிகளாகவும், சிறுவர் உண்ணும் தின்பண்டங்களாகவும், சர்க்கரையாகவும் இன்னும் பலவிதமாகவும் இங்கு கொண்டுவரப்பட்டு அதிக விலைக்கு நமக்கே விற்கப்படுகின்றன. இதனால் நம் தரித்திரம் அதிகமாகிறது. இன்னும் உண்டாகும் பல தீமைகளையும் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

2. இக்காரணத்தோடு நாடுகளில் தரிசாய்க்கிடக்கும் நிலங்களைப் பண்படுத்திப் பயிர்செய்யப் போதுமான ஆட்களில்லை. அனேகர் நகரங்களில் மேல்நாட்டார் தாபித்திருக்கும் தொழிற்சாலைகளில் போய் கூலிவேலை செய்தால் தினம் 12 அணு முதல் 2 ரூபா வரையில் கிடைக்கிறதென்று அங்கு செல்கிறார்கள்.

3. நிலங்களிலோ தினேதினே சாரம் குறைந்துகொண்டே போகிறது. ஏனெனில் பயிரிடும் மார்க்கம் 50 வருடங்களுக்குமுன் நடந்த முறைமையிலேயே இப்போதும் நடக்கிறது. தக்க எரு போட்டுப் பூமியைப் பண்படுத்துவதில் சற்றேனும் சீர்திருத்தமே யுண்டாகவில்லை. நாட்டில் விவசாயக் கல்வி போதிக்கப்படுவதில்லை. கல்வி கற்றோரோ, விவசாயிகளின் புத்திரர்களாயினும், அத்தொழில் இழிவெனக் கருதி, அதைச் சற்றும் கவனிக்காமல்

சேவகாவிர்த்திக்கே செல்கின்றனர். இவர்களுக்குக் கல்வி யில்லா திருந்தாலும் இவர்கள் விவசாயமேயாவது செய்துகொண்டிருப் பார்கள். இவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்ததால் நாட்டிற்கு இக் கேடு பலனாகக் கிடைத்தது.

இக்காரணங்களால் முன்பு நமது பாட்டனார் காலத்தில் அறு பது கலம் விளைந்த காணி இப்போது முப்பதுக்குத் தாளம்போடு கிறது. இங்கிலாந்தில் எலிஜபெத் இராணி அரசாண்ட காலத்தில் உண்டான விளைவிற்கு இப்போது நான்கத்தனையுண்டாகிறது. ஏனெனில் அவர்கள் விவசாயக் கல்வி கற்று, இரசாயன ஆராய்ச் சியால் பெற்ற அறிவைக்கொண்டு, புதுப்புது எருக்களை யுற்பத்தி செய்து விவசாயம் செய்கிறார்கள். இயற்கையில் அவர்கள் நாடு கற்பாங்குள்ள தாதலின் இரும்புக் கலப்பையில் குதிரைகளைக் கட்டி எருழவேண்டும்.

சுமார் நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன் வரை யில் நம் நாட்டு விவசாயிகள் நவதானியங்களையும் ஆமணக்கு, கரு ம்பு, பருத்தி, தென்னை முதலியவைகளையும் சரியாய்ப் பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள். வேர்கடலையும் பயிராக்கப்பட்டது. ஆனால் நாட்டு வேர்கடலையே; மணிலாகொட்டையல்ல. அப்போது விளை யும் கரும்பால் உண்டான வெல்லமனைத்தும் நாட்டிலேயே உப யோகப்படுத்தப்பட்டன. வெல்லத்திலிருந்து கற்கண்டும், நாட்டு வெள்ளைச்சர்க்கரையும், சிகப்புச் சர்க்கரையும் உற்பத்தி செய்யப் பட்டன.

அக்காலங்களில் வெல்லம் மணங்கு 1-க்கு ரூபா 1-0-0, 1-4-0 க்கு விற்கப்பட்டது. முதல்தர சம்பா அரிசி 15, 16 படி. மிள காய் வீசை 5, 6 அணா. பருப்பு 1 ரூபாய்க்கு 5, 6 படி. நல்லெண் ணெய் வீசை 5, 6 அணா. விளக்கெண்ணெய் வீசை 3, 4 அணா. நெய் வீசை 14 அணா முதல் ரூபா 1-2-0 வரை. மற்ற எல்லாப் பண்டங்களும் இவ்வாறே.

இப்போது நம் நாட்டார் தேச நன்மையைக் கருதாமலே, சுய நலம் கருதி ரொக்கப்பணம் கிடைக்குமென்று மணிலாக் கொட்டை, அவுரி முதலிய மேல்நாட்டிற் கனுப்பப்படும் பொரு ள்களையே உற்பத்தி செய்கிறார்கள். ஒவ்வொருவரும் சுயநலம் கருதியே வேலை செய்தால் முடிவில் எல்லார் நலமும் தீங்காகவே

முடியுமென்ற உண்மையை யிவர்களறிவதில்லை. தேச க்ஷேமத்திற்கென்று—பிறர் நலத்திற்கென்று பாடுபடுவதே தன் நலத்தை விருத்தி செய்வதாகும். தேச க்ஷேமத்திற்கு வேலை செய்பவன்றான் தன் நலத்திற்கு மிக்க அனுகூலம் தேடுபவனுவான்.

பொது நலத்திற்கு உழைப்பதில் சுய நலம் இல்லாமலில்லை. ஆழ்ந்து நோக்கின் சுயநலமில்லாத வேலையே யில்லை. ஆன்மா எப்போதும் தன் சுகத்திலேயே நாட்டமுடையது. உலகபோகமனைத்தும் வெறுத்துவிடும் ஞானிகூட எல்லா இன்பங்களினும் மேலான அழியாத பேரின்பம் என்ற ஒன்று கிடைக்குமென்றே அப்படிச் செய்கிறான். ஆகையால் எவரும் எப்போதும் பிறர் நன்மையை, தாய்நாட்டின் நன்மையைக் கருத்தில் வைத்து வேலை செய்வதே ஒவ்வொருவரும் க்ஷேமமடைவதற்குத் தகுந்த வழியாகும். அந்தோ! நமது நாட்டார் இனியேனும் இதைக் கவனத்தில் வைத்து நடப்பார்களோ!

நம் நாட்டின் தரித்திர நிலைமை யொழியவேண்டுமாயின் பின் கண்ட இரண்டொரு விஷயங்களையேனும் நாம் கவனித்து நடக்க வேண்டும்:—

1. கிராமங்களிற் சென்று விவசாயிகளுக்கு மேற்கண்ட உண்மைகளை யெடுத்துக் கூறி, அவர்கள் அவற்றை யுணர்ந்து நம் நாட்டிற்கு அவசியமான தானியங்களையே பயிரிடும்படிச் செய்ய வேண்டும்.

2. கிராமங்களில் கட்டாயக்கல்வி போதிக்கப்படவேண்டும். பாஷைக்கல்வியோடு விவசாயமும் கைத்தொழிலும் கற்பிக்கப் படவேண்டும்.

இவ்விஷயத்தில் நாமே முன்சென்று முயற்சி எடுத்துக் கொண்டால்தான் பயனுண்டு. அதை விட்டு அன்னியர் உதவியையே எதிர் பார்த்திருந்தால் நாம் ஒருபோதும் நன்மையடைய மாட்டோம். நாம் முயன்றால் கடவுள் தயவால் உதவி யேற்படும். நம்மவராகிய மந்திரிமாரும், துரைத்தனத்தைச் சேர்ந்த அவயவிகளும் இத்தகைய விஷயங்களைக்கவனித்தால் தாய்நாட்டிற்குப்பெரு நன்மைசெய்த புண்ணியமும் மங்காக்கீர்த்தியு மடைவார்களென்பது திண்ணம். ஒவ்வொரு கிராமத்தாரும் இவ்விஷயத்தில் முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். நகரங்களில் பெருங் கூட்டமான

ஜனங்கள் முன் பிரசங்கம் செய்யும் தேசாபிமானிகள் கிராமங்களுக்குச் சென்று இக்காரியத்தை கிராமவாசிகளுக்கு உபதேசித்தால் பலனுண்டாகும். நகரங்களில் சங்கங்கள் கூடி தக்க ஆட்களைக் கிராமங்களுக்கனுப்பி இதைப்பற்றியும் நமது மதத்தைப்பற்றியும் பிரசாரம் செய்வித்தால் அது பயனளிக்கும் உயர்ந்த தேசத் தொண்டாகும்.

3. இது ஒரு முக்கியமான விஷயம். ஆங்கிலம் கற்கும் மாணவர்கள் பின்னால் துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்தே நாம் சீவிக்கவேண்டும் என்ற தகாத எண்ணத்தை யடியோடொழித்து விட்டு, அவரவர்களுக்குத் தக்கபடி விவசாயமோ, வர்த்தகமோ செய்து அதில் பிரசித்தி பெறவேண்டும் என்ற ஆவல்கொண்டு அதற்கு அவசியமான கல்விகளைக் கற்கும்படி செய்யவேண்டும். பெற்றோரும் உபாத்திமாரும் இவ்விஷயத்தில் முயற்சி யெடுத்துக்கொண்டு மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

4. ஆகாரத்திற்கு வேண்டிய பொருள்களுக்கும் உடைகளுக்கும் அன்னியநாட்டை யெதிர்பாராமல், அவைகளை நாமே உற்பத்திசெய்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் நாம் சொந்தமாய் செய்துகொள்கிறவற்றை-நம் நாட்டில் நம்மவர் கையால் உற்பத்தி செய்யப்பட்டவற்றை யுபயோகிக்காமல் அன்னிய நாடுகளிலிருந்து வருபவற்றை யுபயோகிப்பது நமக்கு அகௌரவமும் பாபமு மாகும் என்று கருதவேண்டும்.

5. நமக்கு அவசியமல்லாத அன்னியநாட்டுப் பொருள்களை, அவற்றின் தளுக்குக்கு மயங்கி படாடோபத்திற்காகவும் வீண் பெருமைக்காகவும் வாங்கி யுபயோகிப்பதை யடியோடு விலக்க வேண்டும்.

எல்லாம்வல்ல கருணாநிதியாகிய பரம்பொருள் இவ்வழியில் நாம் நடக்கும்வண்ணம் நமக்கு நல்லறிவளித்து அருள்புரியுமாறு நாமனைவரும் தினம் அவரைப் பிரார்த்திப்போமாக.

ஓம்தத்ஸத்.

தனித்தமிழ்ப் பாதுகாப்பு.

மாசித் திங்களிதழில் 309-ம் பக்கம் துரைசாமி ஐயரவர்கள் நாகை நீலாம்பிகை அம்மையார் வரைந்த கட்டுரையில் சில பொருந்தாக் கொள்கைகளுளவென்று காட்டியுள்ளார்கள். அவற்றினுண்மையை ஈண்டாராய்வாம்.

'வடமொழியைத் தெய்வபாஷையென்று சொல்லியது பொருந்தா விட்டால், "தெய்வத்தமிழ்" என்று அம்மையாரே கூறுவதெப்படி?' என்கிறார்கள். இவ்வாறு இவர்கள் கேட்டதிலிருந்து இவர்கள் அம்மையார் கட்டுரையைச் செவ்வையாய் வாசிக்கவில்லையென்று நன்கு விளங்குகின்றது. வடமொழி தெய்வபாஷை என்பதை அம்மையார் மறுக்கவில்லை. ஆனால் அது தேவர்கள் பேசும் மொழி என்பதைத்தான் மறுத்தார்கள். தேவர்கள் அறியாமை இருளால் பற்றப்படா உள்ளமுடையவர்களாகையால், அவர்கட்கோர் மொழி வேண்டுவதில்லை. மொழியினுதவியின்றி அவர்கள் வாழலாம் என்றுதான் அம்மையாரவர்கள் சொன்னார்கள். ஆனால் "தெய்வத்தமிழ்" என்றதென்னை எனில், தெய்வத்தன்மை பொருந்திய தமிழ் என்பதை வலியுறுத்துதற்கே. இவ்வாறு தமிழுக்கு தெய்வத்தன்மை இல்லாவிட்டால் தொண்டர் நாதனைத் தூதுவிடவும், முதலையுண்ட பாலனை அழைக்கவும், எலும்பைப் பெண்ணுருவாக்கவும், மறைக்கதவினைத் திறக்கவும் முடியுமோ? தெய்வமாகிய சிவத்தை உணர்த்துவான் வேண்டிப் பிறந்த திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசுகளும், சுந்தரமூர்த்திகளும், மாணிக்கவாசகப் பெருமானும் தங்கள் திருப்பதிகங்களை இத்தெய்வத்தமிழின்கண்வைத்து இயற்றியிருக்கிறார்களன்றோ? நிற்க,

" அம்மையார் சமஸ்கிருத பாஷையை 'ஓசை இனிமை இல்லாதது' என்று சொன்னால் அதனால் தமிழுக்கு என்ன இனிமை அதிகமாய் வந்துவிட்டது?" என்கிறார்கள். இவ்வாறு ஏனைய மொழிகட்கெல்லாம் இல்லா இனிமை தமிழுக்குண்டென்பதை சுவாமி வேதாசலம் அவர்கள் "தமிழ் நான்மறையின் தெய்விக உண்மை" என்னுங் கட்டுரையில், நன்கு விளக்கியுள்ளார்கள். ஈண்டு சிலவற்றைக் கூறுவாம். க்,ச்,த்,ப்,ட் என்பனவற்றை எடுத்தல், படுத்தல், நலிதலாகிய சுதாத்த, அநுதாத்த, சுவரிதவகை பற்றி உச்சரிக்கும் வல்லோசையும், மெல்லோசையினையே கெடுத்துத் தோன்றும் ஸ, ஶ, ஷ, ஹ, க்ஷ என்னும் அநுகரண குறிப்போசைகளும் தமிழின்கண் இல்லாமையும், மெய்யெழுத்துக்களை முதலிற்கொண்டு ப்ரபலம், ந்யாசம், க்ரமம் என்றற்றொடக்கத்தான் வருந்தி யுச்சரிக்கவேண்டாது, அவற்றை உபயோகிக்குங்கால் உயிர் எழுத்தைச் சேர்த்து பிரபலம், நியாசம், கிரமம், என்று இலேசாக்கிச் சொல்லும் நெறியுடைத்தாதலால், ஓசை இம்மெல்லோசை இன்பத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் "ழ"கரம், தமிழின்கண்மாத்திர மிருக்க மற்ற மொழிகளிலில்லாமையால், அம் மெல்லோசை இன்பம் தமிழுக்கே உரிமைப் பண்டமென்பதை அறிவுடையோர் எவரேனும் அங்கீகரிக்கக் கூசுவாரோ? இம்மெல்லோசையாலன்றோ, அம்மெல்லோசையோடு சம்பந்தப்பட்ட சிவத்தை யுணர்த்திய நால்வரும் தம்மருமைத் திருவாக்குகளைத் தமிழில் ஓதினார்கள். இன்பம் தமிழுக்கே உண்டென்பதைச் சிறுமகாரு மறியலாம். நிற்க,

திருவாளர் மாணிக்கநாய்க்கரவர்கள், சாதாரணமாய் வழங்கும் 1000 ஆரியச் சொற்களையும், 1000 ஆங்கிலச் சொற்களையும், 1000 தெலுங்குச் சொற்களையும், 1000 தமிழ் சொற்களையும் இன்னும் மற்ற மொழிச் சொற்களையும் எடுத்து, இவற்றை உச்சரிக்குங்கால் எவற்றினால் அதிகக் காற்று இருதயத்திலிருந்து வெளிவருகிறதென்று பார்த்தவழி, ஆரியத்திற்கு அதிகக் காற்றும், தமிழுக்கு எல்லாவற்றிற்கும் குறைந்த காற்றும் வெளி வருகிறது என்று ஆராய்ச்சியுரை கூறுகின்றார்கள். இதனால் ஆரியபாஷையைப் பேசுங்கால் அதிகக் காற்றுச் செலவும், அதனால் அக்காற்றோடு சம்பந்தப்பட்ட பிராண சக்தியும் அதிகமாகச் செலவழிக்கப்படுகிறதென்றும் விளங்கவில்லையா ? இவ்வாறு தன்னைப் பேசுவார்களின் பிராணசக்தியை வரிதாக்கி அவர்களைச் சீக்கிரமாகக் கொல்லுமாற்ற லிருக்கின்றதனாலன்றோ ஆரியமொழி தற்போது இறந்தொழிவதாயிற்று ! இவ்வாறு இது இறந்தொழிந்தது இதனிடத்திலிருக்கும் வல்லோசையாலன்றோ ! அது கிடக்க,

ஐயரவர்கள் தமிழ்ச் சொற்கள் ஆரியத்தில் கலந்ததற்கு உதாரணம் கேட்கிறார்கள். காட்டுவாம். அள், கள், கல், கு, சா, பண், பக், மின், வள், நல் முதலிய சுத்த செந்தமிழ்ப் பகுதிகளிற் பிறந்த ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டினம், பாகம், மீனம், வளையம், நாரங்கம், முகம் முதலிய தமிழ்ச் சொற்கள் ஆரியத்தில் கலந்திருத்தல் ஆராயவல்லாரெல்லாம் அறியற்பாலதாம். நிற்க, 'இஞ்சிவேர்' என்னும் தமிழ்ச்சொல் 'ஸ்ரிங்கவேரா' என்று சமஸ்கிருதத்திலும், 'ஜிஞ்சிபெர்' என்று கிரீக்கிலும், 'ஜிஞ்சர்' என்று ஆங்கிலத்திலும் மாறினது என்றும், 'நீரும்' 'மீனமும்' பழைய வடமொழி நிகண்டிலில்லாமல், அதற்கு முன்னும் இவை இரண்டும் தமிழில் வழங்கப்படுதலும், 'அடவி, ஆணி, குடி, குடுகு, வலை' முதலியன தமிழாய் வடமொழி ஏறினவென்பரென்றும், கால்ட்வெல்துரை மகனாரும், நச்சினார்க்கினியரும் 'காலம்', 'உலகு' என்பன தமிழ்ச் சொற்களே என்று கூறுதலையும், திருவாளர் தீனதயாளு என்பவர்கள், ஏழாவதாண்டு ஆனந்தனில் " தமிழர் புராதனமும், தமிழின் பெருமையும்" என்னுங் கட்டுரையிற் சொல்லியிருக்க, அதை அய்யரவர்கள் வாசியாதது மிகவும் வருந்தத்தக்கதே. அவ்வாறு அவர்கள் வாசித்திருப்பார்களாயின் "காலம்" என்னுஞ் சொல்லை அம்மையாரும், 'உலகு' என்னுஞ் சொல்லை நாயனாரும் எடுத்து உபயோகித்தது குற்றமென்று சொல்லியிருக்கமாட்டார்கள்.

கடைசியாக, "காலஞ்சென்ற ஸ்ரீமான் சுவாமி விவேகானந்தரும் அம்மாதிரியே ஆரிய திராவிட விவாதம் குழந்தைகள் சண்டைபோல் அறியாமையால் தான் நடைபெறுமென்றார். ஆகையால் நாம் எல்லாரும் சமமாகவும் சகோதரபாவத்துடனும் இருக்கவேண்டும்" என்கிறார்கள். இவ்வாறு இவர் புத்திகூற, ஆரிய திராவிட விவாதம், அம்மையார் உபநியாசத்

தில் என்ன கண்டார்களோ அறிகின்றிலம். அம்மையார், தமிழ் ஆரியத்தினின்று பிறந்ததென்போர்க்கும், "ஒன்றேயாயினுந் தனித்தமிழுண்டோ" என்று தமிழை இகழ்ந்து பேசுவோர்க்கும், "தமிழ், மக்களுக்குரிய பாஷை. ஆரியம், தேவர்கட்குரிய பாஷை ஆகையால் ஆரியம் சிறந்தது. தமிழ் தாழ்ந்தது" என்போர்க்கும், "ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் போதுமான சொற்கள் தமிழிலில்லை. ஆரிய சொற்கள் அவசியம் வேண்டும்" என்போர்க்கும், அவரவர்கள் கூறும் கூற்றின் சிறுமையையும், தமிழின் பெருமையையும் எடுத்துக் காட்டுவதற்கே அக்கட்டுரை எழுதியிருக்கிறார்களேயன்றி வேறு எவ்வித காரணத்தினாலுமில்லை என்பதையும், அம்மையார் எழுதிய கட்டுரையில் அத்தகைய புத்தி புகட்ட சந்தர்ப்பமில்லை என்பதையும் ஐயரவர்கள் உணரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றனம். தமிழரையும், தமிழையும் எவரும் யிகழ்ந்து பேசாதிருக்க எல்லாம்வல்ல இறைவனின் திருத்தாமரைகளை இறைஞ்சுகின்றோம்.

ஓர் தமிழன்.

சுபோதத் துணுக்கைகள்.

பட்டினத்தடிகள் விக்கிரக வணக்கத்தைக் கண்டித்திருக்கிறாரா ?

நமது சைவசமய ஞானியர் வாக்குகளின் உண்மைப் பொருட்களையுணராது சில புறச்சமய அஞ்ஞானிகள் "நரிவால்கொண்டு கடலாழம் பார்ப்பதுபோல்" தங்கள் கூழை மதிக்கெட்டியவாறு விபரீதார்த்தம் படைத்து, "உங்கள் சமயத்திலுள்ள ஞானவானாகிய பட்டினத்துப் பிள்ளையார் விக்கிரக வணக்கஞ் செய்யக்கூடாதென்று கண்டித்திருக்க, நீவிர் விக்கிரக வணக்கஞ் செய்வதற்கு நியாயமென்னை" என்று துராக்ஷேபந் தொடுத்து, அவர் பாடிய செய்யுட்களுட் ஆங்கொன்று ஈங்கொன்று மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றார்கள்.

முதலாவது செய்யுள் :—

"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியினு
மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்துவிட்டோ
ரில்லினு மன்ப ரிடத்தினு மீசனி ருக்குமிடங்
கல்லினுஞ் செம்பினுமோ விருப்பா னெங்கள் கண்ணுதலே."

இதன் பொழிப்புரை :—நெற்றிநாட்டத்தை யுடையவராகிய எமது சிவபெருமான், சிலையிலும், செம்பினாலியற்றிய விக்கிரகத்திலுமட்டுந்தானா எழுந்தருளியிருப்பார்;(அங்ஙனமன்று அவற்றின்மாத்திரமேயல்லாமல்)மந்திரமொழியிலும், அம் மந்திரமொழியின் சித்தியிலும், வேதங்களிலும், (ஆணவ மலத்தினைக் காரியப்படுத்துதலின்) அவ்வாணவமாகிய இருளிலேயும், சுத்த மாயயினைக் காரியப்படுத்துதலின் மாயா காரியமாகிய ஆகாயவெளியிலும், (சாத்திரங்களை) ஆராய்ந்து (பிரபஞ்சப் பற்றினை) நீக்கினோர் வீட்டிலும், அடியாரிருதயத்திலும் இருப்பன்.

ஓகாரம் வினைப்பொருளைத் தந்தது. "இச்செய்யுள் இறைவன் உருவமே" எனச் சாதிப்பாரையும், "அருவமே எனச் சாதிப்பாரையும்" நிராகரித்து, அருவமாயும், உருவமாயும், இருப்பான் என்னும் உண்மையினை விளக்கிக் காட்டுகின்றது. இத்தகைய உண்மைப்பொருளை யறியாது பட்டினத்தடிகள் விக்கிரக நிக்கிரகஞ் செய்தாரென உளறி வழியும் அஞ்ஞானிகளின் அறியாமையைக் குறித்து மிகவும் வருந்துகின்றேம். அவர்கள் நெற்றிக்கண்ணுடைய திருவுருவத்தினைத் தெரிவிக்கும், "கண்ணுதல்" என்னும் அரிய பிரயோகத்தினை உணர்வாராயின், அந்தோ இத்தகைய துராக்ஷேபந்தொடுத்து இடர்ப்படுவார்களா? இத் துராத்துமாக்களின் வாயை அடைப்பதற்காகவன்றோ, சிவஞானச் செல்வராகிய பட்டினத்தடிகள் "கண்ணுதல்" என்ற பிரயோகஞ் செய்து வைத்தார். இப்பிரயோகத்தினால் கடவுள் அருவமாயும், உருவமாயுமிருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்கிறார் என்னும் நெறியையே அவர் கடைப்பிடித் தொழுகினர் என்பது தேற்றம். அருவமாகிய கடவுளுக்கு நெற்றி நாட்டம் வந்தது யாங்ஙனம்? என்றும், சர்வ வியாபகராகிய கடவுள் விக்கிரகங்களின் மாத்திரம் இல்லையென்று விதண்டாவாதஞ் செய்வது என்னமதி எனவுங் கடாவி மறுக்க.

இரண்டாவது செய்யுள் :—

"உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலே னுயர்பொன் னெனவே
யொளியிட்ட தாளிரண் டுள்ளேயிருத்துவ துண்மை யென்று
வெளியிட் டடைத்துவைத்தே னினிமே லொன்றும் வேண்டிலனே."

இதன் பொழிப்புரை :—இரும்பு உளியினாற் செதுக்கப்பட்ட கற்சிலையினையும், ஒழுங்குறவமைத்த சுண்ணச்சாந்தினா லியற்றப்பட்ட உருவத்தையும், புளியிட்டுத் துலக்கிய செம்பு விக்கிரகத்தையும், துதித்து வணங்கேன், உயர்ந்த பொன்னுக்குச் சமானமெனவே பிரகாசியாநின்ற (சிவபெருமானுடைய) இரண்டு திருவடிகளை மனத்தினுள்ளே வைப்பது (கூடுமான) நன்னிலையென்று சொல்லித் தியானத்தில் வைத்துக்கொண்டேன்; இனிமேல் என்றைக்கும் ஒரு பொருளும் வேண்டியதில்லை.

பகிர் முகத்தில் கற்சிலையினையும், சாந்துருவத்தினையும், பொற்சிலையினையும் தரிசிக்குங் காலத்தில் அவ்வவ்வுருவங்களாகத் தோன்றுவதேயன்றித் தெய்வ வடிவாகக் கிரகிப்பதற்குப் பக்குவமில்லேனாதலின், அப்பாவனையால் அபசாரப்படாது, அந்தர் முகத்தில் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித் துய்வேனென்றனர். விக்கிரகங்களைத் தெய்வமாகப் பாவியாது, தெய்வத்தை விக்கிரகமாகப் பாவிக்க வேண்டுமாதலினாலும், அது அதிதீவிரபக்குவமுடையார்க்கே விளங்குமாதலினாலும், அங்ஙனம் அத்தகைய பக்குவம் அடையாதவழி மனத்தியானத்திலேயே திருப்தியடைய வேண்டியதாதலினாலும் "இனிமேலொன்றும் வேண்டிலனே" என்றனர்.

இங்ஙனம் பொருளறியாத அஞ்ஞானிகள் இந்தச் செய்யுளாலும் பட்டினத்தடிகள் விக்கிரகாராதனையை நிராகரித்துக் கூறினர் எனவாதிப்பர். "தாளிரண்டு" எனத் திருவடிகளைக் குறித்த உண்மை இவர்கள் விளங்கப் பெருதவராவர். தாள் உருவத்திற்கன்றி அருவத்திற்கின்றென்பது அரிவையரு மறிந்தவிஷயம். இந்தப் பிரயோகத்தாலும், அடிகளுக்கு விக்கிரகாராதனையும் உடன்பாடென்பது ஒருதலை.

மூன்ருவது செய்யுள் :—

" நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தா யில்லை மாமறைநூ
லேற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டா
யாற்றிற் கிடந்து துறைதெரியாம லலைகின் றையே."

இதன் பொழிப்புரை :—மனமே! விபூதியைத் தரித்தாலென்ன, கங்கை முதலிய புண்ணிய நதிகளில் தீர்த்தமாடுகிறதற்குப் போயென்ன, (எடுத்த உடலை) மாற்றி ஞானவாழ்வைப் பிறக்க நல்லவகை தெரிந்து கொண்டாயில்லை. பெரிய வேதங்களில் எழுதிக்கிடக்கும் அநேக கோடானுகோடி மந்திரங்களின் (உண்மையினை) என்னென்று தெரிந்தாய்? (பிரபஞ்ச) நதியிலே விழுந்து திருவருளின் துறை தெரிந்து கொள்ளாமல் அலைகின்றனை!

பிரபஞ்சத்தின் கண்ணே மண் பெண் பொன் முதலிய மாயாபோக விஷயங்களிற் கட்டுண்டு, அதிலேயே அழுந்திக்கிடப்பவர்கட்கு, விபூதியினலும், புண்ணிய தீர்த்தங்களினலும் பிரயோசன மென்னென்றனர். ஆகவே எச்சிவ கைங்கர்யங்களையும், எச்சாதனங்களையும் அன்புடனே செய்யவேண்டும் என்று வற்புறுத்தினர்.

இத்திருவாக்குகளை அன்போடு நுணுகி ஆராய்பவர்க்கே உண்மை புலப்படும்; அங்ஙனமின்றி அகக்கண் மறையப்பெற்றுச் சமயதூஷணஞ் செய்யவேண்டும் என்னுந் துர்ச்சிந்தையோடு புறப்பட்ட அஞ்ஞானிகளுக்கு, "உலக மனைத்திற்கும் ஒளியைக் காணுகின்ற தினகரன் கூகையினுடைய கண்ணுக்கு இருளாமாறுபோல" ஆக்ஷேபத்திற்கு இடமாகவே யிருக்குமன்றி உண்மைகள் ஒருபோதும் புலப்படமாட்டா. காமாலை ரோகிக்குக் கதிரவன் மஞ்சள் வர்ணமாய்த் தோன்றுவது சகசந்தான்! "கூலிக்கு மாரடிப்பார்க்கு விடையிறுக்கக் குருவாலுமாகாது" என்னும் முதுமொழி பொய்யாகுமா? எமது பட்டினத்தடிகளுக்கு விக்கிரக ஆராதனை உடன்பாடென்பதற்கு அவரியற்றிய பிரபந்தங்களில் அநேக திருஷ்டாந்தங்களிருக்கின்றன; அவைகளனைத்தையுமெடுத்துக் காட்டப் பத்திரிகை இடம் பெருதென அஞ்சி அதில் சிலவற்றைக் காட்டி உபரதி அடைகின்றேன்.

" நல்லாயெனக்கு மனுவொன்று தந்தருண் ஞானமிலாப், பொல்லா வெனைக்கொன்று போகும் பொழுதியல் பூசைசெபஞ், சொல்லார்நற்

கோயில் நியமம் பலவகைத் தோத்திரமு, மெல்லா முடிந்தபின் கொல்லு கண்டாய் கச்சியேகம்பனே" என்றும், "உமைபங்கன்" என்றும், "விடையேறு மீசன்" என்றும், "ஏற்றுக்கொடியுடையாய்" என்றும், "ஊரீருமக் கோருபதேசங் கேண்மி னுடம்படங்கப் போரீர் சமணைக் கழுவேற்று நீற்றை" என்றும் கூறியிருப்பதை நோக்குக. அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! அஞ்ஞானிகள் பிதற்றும் அசட்டுரைகட்குச் செவி சாயாது மலரகிதராகிய சிவபெருமானைக் குருலிங்க சங்கமங்களில் எந்நாளும் வழிபட்டுப் பிறவாமுத்தியெய்தக் கடவீர்கள்.

ஸ்ரீ க. வைத்தியலிங்கப்பிள்ளை,
வண்ணை நகர். (இந்துசாதனம்)

குறிப்பு :—இத்தகைய குதர்க்க வாதம் புரியும் புறச்சமயிகள், பட்டினத்தடிகள் மற்றபாக்களில் கூறியிருப்பதையும், இப்பாசுரங்களைக் கூறும் போதும் அவர் ஸ்தலயாத்திரை செய்துகொண்டும் சொரூப வணக்கம் செய்துகொண்டுமே கூறினார் என்பதையும் உணர்வார்களாயின் அவ்வாறு தப்புரை கூறார்கள். ஆனால் பாமரரிடம், "உங்கள் சுவாமிகளே இப்படி கூறினார்" என்று சொல்லி அவர்களை யேமாற்றுவதே அன்னார் கருத்தாகும். கல்வியறிவில்லாப் பாமரர் அதைக் கேட்டு மயங்குவது இயல்பே.

பத்திரிகாசிரியர்.

மாதர் நீதிமஞ்சரி.

(338-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெண் கல்வி.

(அருமைத்தாயும் அன்புடைப் புத்திரிகளும்.)

செங்கற்பட்டிற்கடுத்த ஓர் கிராமத்தில், மிக்க செல்வந்தரும் கிராமாதிகாரியுமாகிய ஒருவருடைய மனைவியான மனோன்மணியம்மாள், ஓர் நாள் மாலைப்பொழுதில் தன் வீட்டின் பின்புறத்திலிருந்த சோலையில் உல்லாசமாக உலாவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது வீட்டிற்குள்ளிருந்து இரண்டு பெண்கள் 'அம்மா! அம்மா!!' என்றழைத்த வண்ணமாய் அங்கு வந்தனர். அவ்விருவரும் அவ்வம்மையாருடைய புத்திரிகள். மூத்தவள் பெயர் மரகதம். அவளுக்குச் சுமார் பதினெட்டுப் பிராயமிருக்கும். இளையவள் 15 வயதுடைய மங்களம் என்பவள்.

தன் புத்திரிகளைக் கண்டதும் மனோன்மணியம்மாள் சந்தோஷத்துடன் அவர்களைத் தழுவி முத்தமிட்டு, 'என் கண்மணிகளே! நீங்கள் என்னைத் தேடிவந்தது ஏதாவது விசேஷத்தை முன்னிட்டோ?' என வினவினாள்.

மரகதம்.—இல்லையம்மா. ஒன்றும் விசேஷமில்லை. நீங்கள் கொடுத்த புஸ்தகங்களைப் படித்து முடித்துவிட்டோம். முடிந்ததும் வேறு புஸ்த

கம் கேட்கலாமென்று உங்களைப் பார்த்தோம். அங்கே இல்லாமையால் இங்குத்தான் இருப்பீர்களென் றெண்ணிவந்தோம்.

மனோன்மணி.—என் அருமைக் குழந்தைகளே! உங்களைப் புத்திரிகளாக அடைந்ததற்காக நான் மிக்க பெருமை யடைகிறேன். நீங்கள் கல்வி விஷயத்தில் விசேஷ சிரத்தையுடையவர்களா யிருக்கிறீர்கள். அது தான் மக்களாய்ப் பிறந்தோர்க்கு அழகாகும். ஏனைய அழகுகள் அழகல்ல.

“ குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.”

என்று கூறியிருக்கின்றனர் பெரியோர்!

மங்களம்.—என்னருமைத்தாயே! எனக்கொரு சந்தேகம் தோன்றுகின்றது. தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் வேறு யாரிடம் கூறுவேன்? குற்றமாயிருந்தால் மன்னிக்கவேண்டும். அதாவது, பெண்கள் ஏன் படிக்கவேண்டும். அதனால் அவர்கள் அடையும் பயனென்ன?

மனோன்மணி.—கண்ணே! நீ அப்படியா கருதுகின்றனை? இதே கருத்துடையவர்கள் நம் நாட்டில் அநேகர் உளர். அவர்கள் அறியாதவர்களென்றே கூறுவேன். எனினும், உன் ஐயத்தை யகற்றுதல் எனது கடமையாகலின், ‘பெண்களுக்குக் கல்வி அத்தியாவசியமே’ என்பதைச் சுருக்கமாய்ச் சில நியாயங்களைக் காட்டி விளக்குகின்றேன்; கவனமாய்க் கேள். மரகதம்! நீயும் கவனி.

குழந்தைகாள்!

பெண்களுக்குக் கல்வி ஏன் என்று கேட்கும்படியான நிலைமை நேர்ந்ததற்காக, தேசாபிவிருத்தியை விரும்பும் ஒவ்வொருவரும் வருந்தாமலிருக்க முடியாது. இக்கேள்வி எக்காலத்தது? பூர்வகாலத்தது என்போமாயின், இதுவரை ஏன் முடிவு பெறாதிருக்கின்றது? என்னும் ஆசங்கை யுண்டாகும். கால சக்கரம் சுழன்றுவரும் வேகத்தில் பிற்காலத்துண்டான மாறுதல் என்பதே சரியான விடையாகும். பூர்வகாலத்து இவ்வினாவிற்கு இடமில்லாமல் ஆண்களும் பெண்களும் கல்வி கற்றனரென்பது சரித்திரங்களால் விளங்குகின்றது.

காலபேதத்தாலுண்டான, ‘பெண்களுக்குக் கல்வி ஏன்?’ என்னும கேள்வியானது, பெண்களுக்குக் கண்களேன்? என்பதையே ஒத்திருக்கின்றது.

“ எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்.”
“ கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.”

"கல்வியில்லாதவர் மூடர்."

என்னுமிவைபோன்ற ஆன்றோர் வாக்கியங்களால், கல்வியுடையோரே கண்ணும் அறிவும் உடையோராவரென்பது விளங்குகின்றது. கல்வியாலுண்டாம் பயனை நோக்குமிடத்தும், 'அது ஒரு பாலார்க்கு மாத்திரம் உரியதாம்,' எனக் கூறுதற்கிடமின்றி, ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் உரியதே என்பது வெளியாகும். திருஷ்டாந்தமாக,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்ம ரறுக்கும் மருந்து."

இப்பாடல்களின் பொருளாவது "(கல்வியானது) தருமத்தையும், செல்வத்தையும், இன்பத்தையும், மோக்ஷத்தையும் தரும்; தலைவாயிலில் நல்ல கீர்த்தியையும் நிலைநிறுத்தும்; வரத் தகுவதாகிய ஒரு கவலை நேரிட்ட காலத்தும் உதவிசெய்யும்; (ஆதலால்) அற்ப வாழ்நாளையுடைய உயிர்களுக்கு நீங்காத துணை, கல்வியினும் மேம்பட்டது வேறொன்றுமில்லை." "(கல்வியானது) இப்பிறப்பில் பயன்கொடுக்கும்; பிறர்க்குக் கொடுத்தாலும் குறைவுபடாது; கற்றவர்களைப் பிரகாசிக்கச் செய்யும். தாமுள்ளவராயிருக்கும்போது கெடுவதில்லை; ஆகையால் எவ்வுலகத்திலும் கல்வியைப் போல அஞ்ஞானத்தை நீக்கும் மருந்தை நாம் கண்டறியோம்," என்பதாம்.

இச்செய்யுள்களின் பொருளை ஆராயுமிடத்து கல்வி புருஷர்களுக்கே யுரியதன்று; பெண்களுக்கு முரியதேயென்று அறியலாகும்.

தவிர, இல்லறம் பெண்களாலேயே நடைபெறுவது. "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை," "இல்லாள் இல்லாதவீடு இடுகாடு," வீடு வாசல்களைச் சுத்தமாக வைத்திருத்தலும், வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்து கணக்குகளைச் சரியாக வைத்தலும், கணவன், மாமன், மாமி, உற்றார், அன்னியர் முதலாயினோரிடத்து அவரவர்களுக்கேற்றவாறு நடந்து கொள்ளுதலும், பிள்ளைகளை நல்லவிதமாக வளர்த்தலுமாகிய பலவகைப்பட்ட வீட்டுக்காரியங்களை விமரிசையாக நடத்துவதில் புருடரைவிடப் பெரும்பொறுப்புவாய்ந்த பெண்கள் கல்வியில்லாதவர்களாயின், தங்கள் கடமையை உணர்ந்து சீராகக் குடித்தனம் செய்ய எவ்வாறு முடியும்?

ஒரு வகுப்பார், 'பெண்கள் கல்விகற்றால் புருஷர்களை மதிக்கமாட்டார்கள். கற்புக்கழிவு உண்டாக்கும் தீத்தொழில்களில் பிரவேசிப்பார்கள்' எனக் கூறுவர். 'மணற்கேணியைத் தோண்டுந்தோறும், தோண்டுந்

தோறும் நீர் அதிகமாகச் சுரப்பதுபோல, கல்வியைக் கற்குந்தோறும் கற்குந்தோறும் அறிவு வளரும்' என்று பெரியோர்கள் பேசியிருக்க, கல்வி அகங்காரம் முதலிய தீக்குணங்களை உண்டாக்குமென்பது, அமுதம் மரணத்தை யுண்டாக்கும் என்னும் அபிப்பிராயத்தை யொத்திருக்கின்றது. அப்படியானால், புருஷர்களுக்குமாத்திரம் அக்குணங்கள் தோன்றாவோ? கல்வியானது அகங்காரத்தைக் கொடுத்துக் கற்பைக் கெடுக்குமென்றால், கல்லாதவர்கள் கர்வ மடைவதில்லையா? கற்பிழப்பதில்லையா? அது கல்வியின் குற்றமன்று. அதைக்கையாள்பவரின் குற்றம். தவறுதலாகச் சிலர் அவ்வாறு நடந்துகொள்ளுவதினாலேயே கல்வியை நிராகரித்து விடுதலாகாது. சோறு உண்பதால் சிலர் இறந்துவிடக் காண்கின்றோம். அதனால் சாதத்தை நிராகரித்துவிடுவோமா? இவ்வளவேன்? முற்காலத்திலிருந்த சீதை, தமயந்தி, சாவித்ரி, சந்திரமதி முதலிய கற்பரசிகளுடைய சரித்திரங்களைக் கவனித்துப் பார்ப்போமானால், அவர்கள் நன்றாகக் கற்றுணர்ந்தவர்களே யென அறியலாகும். அவர்கள் தீக்குணமுடையவர்களா யிருந்தாரில்லையே. அவர்களும் கல்லாதவர்களே யென்று வைத்துக்கொண்டாலும், கல்விக்கு அதிதேவதையாகிய கலைமகளும் அப்படித்தானா? இல்லை யில்லை.

கல்வியா லடையவேண்டிய பயன் இன்னதென்று அறியாது கற்போரே முன் கூறியபடி துர்க்குணமுடையாராவர். நாம் எவ்வாறு ஒழுகவேண்டுமென்பதைப் பெரியோர் நூல்களில் எழுதிவைக்கின்றனராகையால், அவற்றைப் படித்து அவ்வாறு நடந்துகொள்ளவேண்டியதே கல்விப்பயன். "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" இத்தகை அறிவை விருத்திசெய்யும் கல்வியே ஆண்பெண் இருபாலார்க்கும் தேவை. உலக சரித்திரத்தில் பெரும் புகழ்பெற்று விளங்கும் ஸ்திரீபுமான்களிற் பெரும்பாலோர் சிறந்த கல்வியாளரே யென்பது ஒருவராலும் மறுக்கமுடியாத உண்மை. என்னருமை மக்களே! நான் மிகவும் சுருக்கமாகக் கூறிய விஷயங்கள் உங்கள் சந்தேகத்தைப் போக்கப் போதுமானவை யென்றெண்ணுகின்றேன். ஆகையால் இதுகாறும் நான் சொன்ன விஷயங்களால் ஆண்களைப்போலவே பெண்களும் கல்விகற்றே தீரவேண்டுமென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதல்லவா? (தொடரும்.)

பூ. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.



ஆரிய சித்தாந்தம்.

(தெய்வம்.)

(332-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன்கூறியவாறு மானாபிமானங் கருதாமல் குருவுக்குப் பணிவிடை செய்வதால் பெறும் பேறு யாதெனின், ஜீவான்மாக்கள் மெய்யறிவின்மையினால் பிரபஞ்ச பாசத்திற் கட்டுண்டு, கன்மங்களைச் செய்து,

அதனால் இறந்தும் பிறந்தும் பற்பல வண்டங்கடோறும் பற்பல வுருவங்கொண்டுழன்று களைத்த களைதீரப் பரமபதியின் திருவடி நிழலையடைந்து என்று மழிவில்லாத பேரின்பந் துய்த்திருப்பதுவேயாம். அன்றியும் இம்மையிற் புகழும் சுகமும் மகிமையுமுண்டாம். அதனாற் குரு பணிவிடைசெய்து அவருக்கு மகிழ்ச்சியுண்டாக நடந்து, அவர் அருமையாய்ச் சம்பாதித்து வைத்திருக்கும் பொருளில் ஏதாவது ஒன்றைப் பெறுவது குரு பணிவிடைக்குப் பிரயோசனமாம். அப்பொருள்களாவன:—ஞானயோகம், மந்திரயோகம், பக்தியோகம், மானசயோகம் முதலியவையாம். இவையெல்லாம் மனதை யொரு நிலையில் நிறுத்தும் சக்தியுடையனவாம். மனம் ஒரே நிலையில் நிலைத்து நில்லாவிடில் அதிக சூட்சுமமாய் மனவாசகங்கடந்து நிற்கும் பரம்பொருளை யறிவது கூடாதாம்.

இனித் தெய்வமென்பது யாது? பதார்த்தமா? குணமா? பதார்த்தமெனின் எவ்வித ஆராய்ச்சிக்கும் புலப்படாமையேன்? குணமெனின் ஒரு பொருளைப்பற்றி நிற்கும் தன்மையுடையதேயன்றித் தனித்த ஒருபொருளாகாது. பொருளாகாதது எல்லாம் இன்மையிற் கொள்ளப்படுமாதலால் தெய்வமுண்டென்று நம்புவதெப்படி? எவ்வகையாலுங் காணப்படாததோர் பொருளை யுண்டென்று நம்புவதினாற் பயன் யாது? அது காரணமாகத் தவமுதலிய செய்து கஷ்ட நஷ்டங்களை யடைவது வியர்த்தமல்லவோ? பதார்த்த சோதகர்கள் சோதனை செய்து பார்த்ததில் அவ்விதமான பொருள் ஒன்றுண்டென்று ஒப்பவில்லையெனின், பரிசோதகர்கள் எல்லாரும் ஜடப்பொருள்களையே பரிட்சித்தறிகின்றார்கள். இது ஜடப்பொருளன்று ஆதலால் அவர்களது சோதனைக்ககப்படவில்லை. பொருள்கள் மூவகையென்று நமது வேதாதி நூல்கள் கூறுகின்றன. இதனைப் பதிபசு பாசமென்று சைவாகமங்கள் கூறும். ஜகஜீவபரம் என்பர் அத்வைதிகள். சித் அசித் ஈசுவரனென்பது வைணவாகமம். இவற்றுள் பதியென்பதே பரம், ஈசுவரன் என்பனவற்றால் ஓதப்படும். சித்து ஜீவன் என்பன பசுவையுணர்த்தும். பாசம், ஜகம், அசித் மூன்றும் ஒரு பொருளனவாம். இவற்றுள் பாசம், ஜகம், அசித் என்பன ஜடப்பொருளைக் குறிக்கும். ஆன்மாவே சித்து, பசு, ஜீவனென்பனவற்றால் விளக்கப்படும். ஜடப்பொருள்களை இந்திரியங்களாலறியலாம். கண்ணாற் காணப்படுவது உருவப்பொருளாம். இந்தப் பொருளே கண்களாலும் அவற்றுக்கு உதவியாயிருந்து நுண்ணிய பொருளைத் தெரிவிக்கும் கருவிகளாலும் காணப்படுவனவாம். ஏனைய சித்துப் பொருள் எவ்விதமான கருவிகளாலும் இந்திரியங்களாலுங் காணப்படுவதல்லவாம்.

இப்பொருளைக் காண்பதற்கு நூல்களும், மனசும், யோகமுமே கருவிகளாம். மனம் இந்திரிய ராஜனென்று வியந்து கூறப்படுகின்றது. ஐம்புலன்களாலு மறிவிக்கப்படும் விஷயவறிவை மனமே யறிந்து ஜீவனுக்குத் தெரிவிக்கின்றது. இந்திரியங்களாலும் கருவிகளாலு மறியப்

படாத சில லௌகிக விஷயங்கள் கலக்கமற்று நிர்மலமாயிருக்கும் மனதி ஹற் கண்டுகொள்ளப்படுவது பிரத்தியட்சம். நூல்களாற் கூறப்படும் அரிய விஷயங்களையும் மனமாராய்ந்து அறியுமியல்புள்ளது. விஷயவா சையால் அழுக்கடைந்து மலினமான மனதினுற் காண்பதரிது. சுத்தமா யுள்ள மனங் காணவல்லது.

இனிப் பரம்பொருள் என்பது யாதெனின், ஒரு பொருளில் ஒருவித சக்தியையும், சில பொருள்களில் பல சக்திகளையும் காண்கின்றோம். எல் லாச் சக்திகளுக்கும் இருப்பிடமான ஒரு பொருளுமுண்டென்பது நூல் களின் கருத்து. அந்நூல் கூறியவழி யொழுகி அப்பொருளை யுணர்ந்து களித்து இறுமாந்திருக்கும் மஹாத்மாக்களுக்கு மிதுவே யபிப்பிராயம். அது அளவிறந்த சக்திகளையுடையதாதலால் எல்லாப் பொருள்களிலும் அடங்கி நிற்கும். அவற்றுக்கு மேலும் வியாபகமாயிருக்கும். சர்வ சக்தி யுடையதாதலால் சர்வ ஞானமுள்ளதுமாம். எக்காலத்தும் எவ்விடத்தும் ஏற்றக்குறைச்சலின்றி ஒரே தன்மையதாய் நிறைந்து நிற்றலால் அதைச் சத்து என்று நூல்கள் கூறும். சத்தும் சித்தும் ஒன்றுபட்டது ஆனந்த மய மாம். ஆதலால் நாம் கூறும் பிரமம் சத்து சித்து ஆனந்த (சச்சிதானந்த) சொரூபமுடையது என்பது நூல்களின் கருத்து. சத்து என்பது என்று மழியாது முக்காலத்துமுள்ள உண்மை; சித்து என்பது ஞானம்; அதாவது அன்னிய பிரகாசத்தை விரும்பாமல் சுயப்பிரகாசத்தால் யாவற்றையும் பிரகாசிப்பிப்பது; ஆனந்தம் என்பது துக்கமற்றது; இன்பம். இம்மூன்றும் ஒன்றுபட்டதானுல் லௌகிக சோதனையாற் காண்பதெங்ஙனம்! ஆயின் இதனைக் காண வியலாதாயின் முயற்சியாற் பயன் யாதெனின், இந்திரியங் களுக்கு எட்டாமையினுலேயே உள்ள ஒரு பொருள் இல்லாமற் போய் விடாது. உள்ளபொருள் உள்ளபொருளேயாம். எதெதற்கு எந்தெந்த வகையான பிரயத்தனம் செய்யவேண்டுமோ அததனை யுணர்ந்து முயற்சிப் பதே முயற்சியாம். இந்திரியங்களாற் காண வியலாத வுலகப் பொருள் களைப் பற்பல கருவிகளைக்கொண்டு பரிசோதிப்பதுபோல, உலகங்கடந்த பொருளை உலகங்கடந்த ஞானமாகிய கருவியைக்கொண்டே யறியவேண் டும். ஞானத்தின் முன் ஜடம் நில்லாது. ஜடத்தின் முன் ஞானம் நில் லாது. ஆகையால் யோகக்காட்சி யென்னுங் கருவியினுலே ஜடசித்துக் களைப் பிரித்தெடுத்து ஞானமாகிய கருவியினுலே ஞான சொரூபியான பரம்பொருளை யறியவேண்டும்.

யோகமென்பது மனம் ஞானத்தோடு கலப்பதேயாம். ஞானமென் பிரமசொரூபமென்பது நிச்சயம். அது அசைவற்ற பொருளாம். மனமென்பது சதா புலன்வழியே சென்று அலைந்து திரியு மியல்புள்ளது. அதனுல் அது அசைவற்ற ஞான சொரூபத்தைக் காணுது. ஆயினும் அதை யுதவியாகக்கொண்டே யறியவேண்டும். அதற்காகவே மந்திராதி யோகங்கள் நூல்களாற் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் துணையாகக்

கொண்டே நமது முன்னோர் பிரமப்பொருளைக் கண்டு தரிசித்தார்கள். ஞானமென்பது யாதெனின், பாச சம்பந்தமில்லாததே மெய்யறிவாகிய ஞானமாம். நாத சொரூபமாகிய வர்ணங்களும் ஞானமயமாம். நாதமென்பது பாசமற்ற சுத்த மாயா சொரூபமாம். அது சத்தமாகக் காணப்படுதலால் அதனை சத்தப் பிரமம், நாதப் பிரமமென்று நூல்கள் கூறும். ஞானமயமான இந்த நாதம் பிரமத்துக்கு ஒரு சொரூபமாதலால் இதனையுபாசித்தால் அது பிரமோபாசனையாம். பல வர்ணங்கள் கூடியது ஒரு மந்திரம் என்னப்படும். வர்ணங்கள் என்பது எழுத்து. எழுத்துக்கள் ஒலி வடிவமென்றும், வரி வடிவமென்றும் இருவகைப்படும். இவ்விரு வகை சொரூபங்களையும் உபாசிப்பதே மந்திரயோகமாம். ஒலிவடிவம் தியானத்துக்கும் வரிவடிவம் பகிர்பூஜைக்குமாம். தியானிக்கும்பொழுது வேதங்களாற் கூறப்பட்ட உபாசனாமூர்த்தியையும், தனக்குபதேசித்த குருவையும் மறவாமல் தியானிக்க நாவசையாமல் மந்திரத்தையுமுச்சரிக்க வேண்டும். இதனால் ஒரே காலத்தில் குருவையும் உபாசனா மூர்த்தியையுந் தியானிப்பதிலும், மந்திரத்தையுச்சரிப்பதிலும், மனங் கட்டுப்பட்டு நிற்கும். ஏககாலத்தில் மூன்றிலும் மனதைச் செலுத்த முடியாவிட்டால் ஒன்றிற் செலுத்தவேண்டும்.

குரு சொரூபம், உபாசனாமூர்த்தி சொரூபம், வர்ண சொரூபம் இம் மூன்றிலும் சிந்தை செல்லும்படி பழகவேண்டும். விஷயப் பொருள்களில் மனதைச் செலுத்தக்கூடாது. வர்ண சொரூபம் உபாசனாமூர்த்தியினிடத்தில் மனதைச் செலுத்தும். குரு சொரூபம் அதற்குண்டாகும் இடையூறுகளைக் களையும் உபாயங்களைப் புலப்படுத்தும். பொருள் சொரூபம் மனதைத் தன்னிடத்தில் ஆகர்ஷிக்கும். இதனால் மனதின் அஞ்ஞான விருள் ஒழியும். அஞ்ஞானத்தை ஒழிப்பதே மந்திரமாமெனக. (மந்) மந்த அறிவாகிய அஞ்ஞானத்தைக் குறிக்கும். (திரா) என்பது அவ்விருளைத் திரஸ்கரித்தல் (நீக்குதல்) என்று பொருள்படும். இரண்டையுங் கூட்ட அஞ்ஞானத்தை யொழித்தல் என்பது போந்த பொருளாம். மந்திரயோகத்தால் மனதிலுள்ள அஞ்ஞான களங்கமொழியவே, அது நிர்மலமாய் உபாசனாமூர்த்தி சொரூபத்தை யுணரச் சக்தியுடையதாம். அந்த மனமே மனோ வாக்காதிகளாற் காணப்படாதென்ற பொருளைக் காணக்கூடிய சிறந்த கருவியாம். மந்திரயோகம் சித்தியானபின் அவனால் அடையப்படாத தொன்றுமில்லை. இம்மந்திரயோகத்தில் வழுவாமல் ஒழுகத்தானே ஞானயோகம் கைவரும். இந்த மந்திரயோகமாகிய கருவி குருபணிவிடையா லடையப்படுவதேயன்றி வேறெவ்வகையாலும் சித்திப்பதரிது.

(தொடரும்.)

சிவானந்தசாகரயோகீஸ்வரர்.



உபாத்தியாயர்கள் பாடம் கற்பிக்கையில் கவனிக்கவேண்டிய சாமானிய விதிகள்.

"வித்தியாவர்த்தமானி" என்ற மாதாந்தர சஞ்சிகையின் பழைய பிரதிகள் ஒன்றிலிருந்து "ஆனந்தபோதினி"யைப் பார்வையிடும் உபாத்தியாயர்களுக்குப் பயன்படுமாறு எடுத்தெழுதப்பட்டது.

1. நீ நல்லாடை தரித்துக்கொண்டு மிகச் சுத்தியும் சுறுசுறுப்புமுள்ளவனும் உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்றவனும் விளங்கவேண்டும்.

2. தைரியமுள்ளவனும், பிள்ளைகளிடம் தயையுள்ளவனும் இரு.

3. துர்ப்பியாசங்களை விலக்கிவிடு.

4. உன்னொழுக்கம் வீண் மேல் பகட்டாகவேனும் கர்வத்திற்கேற்றதாகவேனும் இல்லாமல், பார்ப்போருக்குத் திருப்தியாக இருக்கும்படி உண்மையோடு நடந்துகொள்.

5. நீ முகக் கடுப்போடேனும் கோபமாகவேனு மிராமல் எப்போதும் சாந்த சுபாவ முள்ளவனாக இரு.

6. சதா செய்தொழிலில் சிரத்தையுள்ளவனாக இரு.

7. உன் குரலொலி மிதமாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கத்தக்கதாகப் பேசு.

8. நீ சொல்வது பிள்ளைகள் அனைவர்க்கும் கேட்கத்தக்கதாகச் சொல்வதோடு அவர்களும் தெளிவாய்ப் பேசும்படி செய்.

9. தக்க இடத்தில் வகுப்பை அமைத்துக்கொள்.

10. கருப்புப்பலகை, படம் முதலிய உபகரணங்களைத் தக்க இடத்தில் வைத்துக்கொள்.

11. நீ பிள்ளைகள் அனைவரையும் நன்றாய்ப் பார்க்கக்கூடிய ஸ்தானத்தில் அமர்ந்திரு.

12. உன் வகுப்புப் பிள்ளைகளை இங்கொருவரும் அங்கொருவருமாய் உட்கார்ந்திருக்கவிடாமல், அனைவரும் போதுமான இடைவெளியோடு வரிசைக்கிரமமாக உட்காரும்படி செய்.

13. வகுப்பில் ஒவ்வொரு பிள்ளையும் செய்வதைக் கருத்தாய்க்கவனி.

14. பிள்ளைகளை அஜாக்கிரதையாக இருக்கவிடாதே.

15. கிரம சிக்ஷைக்கு விரோதமாக ஏதேனும் காணப்படுமாயின் அதை அந்த நிமிஷத்திலேயே அகற்றுவதற்கு எத்தனப்படு.

16. உன் கட்டளைகளின்படியே சகல பிள்ளைகளும் நடக்கும்படி செய்துகொள்.

17. வகுப்பில் எவ்வளவேனும் சந்தடியுண்டாகும்படி விடாதே.

18. கேள்வி கேட்கையிலும், விடை பெறுகையிலும், எல்லாப் பிள்ளைகளையும் அதிகக் கருத்தாய்க் கவனித்துப்பார்.

19. பாடம் நடக்கையில் உன் குரல் ஒன்றுமட்டுமாவது விடை சொல்லும் பிள்ளையின் குரல் ஒன்றுமட்டுமாவது கேட்குமாறு செய்.

20. நீ எதையாகிலும் சொல்லுகையில் பிள்ளைகள் உன்மீது பார்வையைச் செலுத்திக் கவனிக்கச் செய்.

21. நீ கரும்புப் பலகையில் எழுதுகையில்கூட கவனத்தை வகுப்புப் பிள்ளைகள்மீது இருத்தி, நீ எழுதுவதைப் பிள்ளைகள் கவனிக்கும்படி செய்.

22. ஒரு பிள்ளை விடை சொல்லுகையில் அவன்மீது, மற்றப் பிள்ளைகள் அனைவரும் பார்வையைச் செலுத்திக் கவனிக்கும்படி செய்.

23. நீ கற்பிக்கும் ரீதியானது பிள்ளைகளுக்குப் பிரீதியாயிருக்கும்படி செய்.

24. ஓர் கடினமான கேள்வியைக் கேட்கையில் சிறிதுநேரம் அவகாசம் தந்து பின்பு அக்கேள்விக்கு விடை பகரும்படி பிள்ளைகளில் ஒருவனைக் குறிப்பிட்டுக் கேள்.

25. பிள்ளைகள் சிறிதளவாவது சரியாய்ச் சொல்லிய விடைகளையும் அங்கீகரித்து மிகுதியையும் அவர்கள் சரியாய்ச் சொல்லுமாறு தூண்டு.

26. பாடத்தை ஓர் குறிப்பான சிறந்த போதனாமுறையை அனுசரித்துப் போதி.

27. நீ கற்பிக்கும் பிரதி விஷயமும் பிள்ளைகளுக்கு நன்றாய் விளங்கும்படி போதி.

28. கடினமான விஷயங்களைச் செவ்வையாய் விளக்கிக் காட்டுவதில் உன் திறமையை உபயோகி.

29. கற்பிக்கும் விஷயங்கள் யாவும் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கத்தக்கதாக போதி.

30. நீ கற்பிப்பதால் பிள்ளைகளனைவரும் பெரும்பயனடைந்து களிக்குமாறு செய்.

S. கிருஷ்ணன்,
காரியதரிசி, உபாத்தியாயர் சங்கம், கருங்காலகுடி.

பகவத்கீதை வசனம்.

(353-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏ பார்த்த ! அளவிறந்த எனது விபூதிகளுக்கு ஓர்முடிவில்லை. அவற்றைப் பூரணமாகக் கூறவொண்ணாது. ஓ தருமசிந்தனையுடைய அர்ச்சுனா ! அத்தகைய விபூதிகளில் சிறந்தனவாகிய சிலவற்றைக் கூறுகிறேன் கேட்பாயாக,

சகலப் பிராணிகட்கும் இருதயத்தின் கண்ணுள்ள பிரத்தியகான்மா (சாட்சியாயுள்ளது) நானே யாகிறேன். நானுபேதங்களாகவிருக்கும் இப் பிராணிகட்கெல்லாம் உற்பத்தியும், ஸ்திதியும், நாசமும் நானேயாகிறேன்.

துவாதசாதித்தருள்ளே விட்டுணு நானுகிறேன். சப்தமருத்துவரில் மரீசி நானுகிறேன். பிரகாசவஸ்துக்களில் எங்கும் பிரகாசிக்கும் ஆதித்தன் நானுகிறேன். வானத்தில் ஒளிரும் நட்சத்திரங்களுள் சந்திரன் நானுகிறேன். வேதங்களில் சாமவேதம் நானுகிறேன். தேவர்களில் இந்திரன் நானுகிறேன். இந்திரியங்களில் மனம் நானுகிறேன். சர்வப்பிராணிகளின் சம்பந்தமுடைய காரணகாரியங்களாகிய பூதங்களுக்குள் சேதனம் நானுகிறேன். ஏகாதச உருத்திரர்களுக்குள்ளே மந்திரரூபனுன சங்கரன் நானுகிறேன். யட்சரருள் குபேரன் நானுகிறேன். மலைகளில் மகம் மேரு நானுகிறேன். அஷ்டவசுக்களில் அக்னி நானுகிறேன். சேனுபதிகளுக்குள் தேவர் சேனுபதியாகிய அறுமுகன் நானுகிறேன். நீர்நிலைகளுக்குள் கடல் நானுகிறேன். புரோகிதர்களுக்குள் பிரகஸ்பதி நானுகிறேன். யாகங்களுக்குள் ஜபயாகம் நானுகிறேன். ஸ்தாபரமான (சலனமற்ற) சகல பொருள்களிலும் இமாசலம் நானுகிறேன். மகரிஷிகளுக்குள் பிருகுரிஷி நானுகிறேன். வாக்குகளில் பிரணவமாகிய ஓங்காரம் நானுகிறேன். மரங்களில் அரசு நான். தேவரிஷிகளில் நாரதர் நான். கந்தருவருள் சித்திரரதன் நான். சித்தர்களில் கபிலமுனி நான். அசுவங்களில் (பாற்கடலிற் பிறந்த) உச்சைச்சிரவம் என்ற அசுவம் நான். யானைகளுக்குள் ஐராவதம் நான். மனிதருள் அரசர் நானுகிறேன். ஆயுதங்களுள் வச்சிராயுதம் நானுகிறேன். சர்ப்பங்களுக்குள் வாசுகி நான். நாகங்களுக்குள் ஆதிசேடன் நான். பசுக்களில் காமதேனு நான். ஜலத்தில் சஞ்சரிப்பவைகளில் வருணன் நான். தண்டிப்பவர்களில் யமன் நான். காமங்களுக்குள் புத்திரோத்பத்திக் கேதுவான காமம் நானுகிறேன். அசுரர்களுக்குள் பிரகலாதன் நானுகிறேன். கணிக்கப்பட்டவைகளுள் காலம் நான். பட்சிகளுக்குள் கருடன் நான். மிருகங்களுக்குள் சிங்கம் நான். வேகமாய்ச்செல்லும் வஸ்துக்களுள் வாயு நான். யுத்தவீரர்களுக்குள் இராமன் நான். மச்சங்களுக்குள் மகரம் நான். நதிகளில் கங்காநதி நான். வித்தைகளுள் பிரம்மவித்தை நானுகிறேன். அட்சரங்களுக்குள் ' அ ' காரம் நானுகிறேன். அழிவற்றகாலம் நானுகிறேன். இருவினைப்பயன்களைக் கொடுப்பவனும் நானுகிறேன். சர்வ உயிர்களையும் சங்காரம் செய்யும் மிருத்துயு நானுகிறேன். அவ்வுயிர்களை உற்பவம் செய்பவனும் நானே. பெண்களில் * சப்தமாதர் நானுகின்றேன்.

* (1) கீர்த்தி. (2) ஸ்ரீ (தர்மம், அர்த்தம், காமம்). (3) வாக்கு (சரஸ்வதி) (4) மேதை (கிரந்தங்களின் அர்த்தங்களைக் கிரகிக்கும் சக்தி) (5) க்ஷமை (சுகதுக்கங்களைச் சமமாகக் கருதும் சக்தி) (6) திருதி (சகலபீடைகள் வரினும் சரீரேந்திரியங்களை ஸ்திரமாகச் செய்யும் சக்தி) (7) ஸ்மிருதி (பூர்வம் உணர்ந்திருப்பவற்றை வெகுகாலத்திற்குப் பின்னும் நினைவிற்குக் கொண்டுவரும் சக்தி).

ஆறு இருதுக்களில் வசந்த இருது நான். மாதங்களுக்குள் மார்கழிமாதம் நான். சந்தசுக்களுக்குள்ளே காயத்திரி நான். வஞ்சிப்பவைகளுள் சூது நானாகிறேன். முயற்சியுடையாரிடம் முயற்சி நானாயிருக்கிறேன். ஜெயசீலர்களிடம் வெற்றி நானாகிறேன். பலசாலிகளிடம் வல்லமை நானாகிறேன். சாத்வீகபுருடரிடம் (சத்துவகுண காரியமாகிய) தர்மம், சாந்தம், வைராக்கியம் முதலியவைகள் நானாகிறேன். ஞானிகளிடமுள்ள (பிரம்மான்ம ஐக்கியரூப) ஞானம் நானாகிறேன். யாதவரில் கிருஷ்ணன் நான். சாஸ்திரவான்களுள் சுக்கிரன் நான். பாண்டவருள் தனஞ்சயன் நான். முனிவர்களில் வேதவியாஸர் நான். மறைவான பொருள்களுக்குள் (பூரண) மௌனம் நானாகிறேன். இப்பிரபஞ்ச மனைத்திற்கும் சேதனரூபமான காரணம் நானாக விருக்கிறேன். பரமேசுவரனாகிய என்னையன்றி வேறு யாதொரு பதார்த்தமுமில்லை. (எல்லாம் எனது சொரூபமே.)

ஓ அன்பனே! எவ்வளவு வருந்தினும் எனது பெருமையை முடிவுறக் கூறமுடியாது. அத்தகைய விபூதியை நான் ஒருவாறு ஏகதேசமாக உரைத்தேன். எந்தெந்தப் பிராணிகள் இலக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவைகளும் ஐசுவரியம் பெற்றவைகளுமாக விருக்கின்றனவோ அவை யாவும் எனது சக்தியின் அம்சத்தாலுண்டானவையென் றுணர்வாயாக.

ஏ அர்ச்சுனா! பலவிதமாக இனி நான் உரைத்தென்னபயன்? எல்லாப் பிராணிகளும், சகல அண்டங்களும் என்னில் ஏகதேசமாத்திரத்தில் (எங்கோ ஓரிடத்தில்) ஒடுங்கி நிற்கின்றன. ஆயினும் நான் அவற்றோடு எள்ளளவும் சம்பந்தியேன். என்றிவ்வாறு ஆயர்பாடியில் அவதரித்த பரந்தாமனாகிய ஸ்ரீ கண்ணபிரான் அருளிச்செய்தார்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

11-வது விஸ்வரூப வத்தியாயம்.

[பத்தாமத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் தமது நானாவான விபூதியின் மகிமைகளை யருளியபின் முடிவில் எல்லாப் பிராணிகளும் எல்லா உலகங்களும் என்னில் ஓரிடத்தில் ஒடுங்கிநிற்கும் என்றருளினர். அது பகவானுடைய விசுவரூபத்தன்மையைக் குறிக்கிறபடியால் அச்சொரூபத்தைத் தரிசிக்க ஆவல்கொண்ட அர்ச்சுனன் பகவான் முன்பருளியதைப் புகழ்ந்து துதிக்கின்றான்.]

அர்ச்சுனன் :—"மனவாக்குகளுக்கெட்டாத பரம்பொருளே! துளப மணிந்த முடியுடையவரே! சகடாசூரனைவதைத்த பாதமுடையவரே! எல்லா உயிர்கட்கும் உள்ளுயிராயிருப்பவரே! சோக மோகங்களில் முழுகிக்கிடந்த அடியேனிடத்து கருணை கூர்ந்து தாங்கள் அருளிய அமுதம்போன்ற வாக்கியங்களைக் கேட்டு என் மோகமொழிந்தேன். ஒருவராலும் காண்டற்கரிய பரம்பொருளே! ஒருவர்க்கும் தோன்றாதபடி தாங்கள் எவ்விடத்தும் வியாபித்தவராய் நிற்கின்ற அத்திருக்

கோலத்தை அடியேன் தரிசிக்க அத்தியந்தம் ஆவலுடையவனாக விருக்கிறேன்" என்று மொழிந்தான்.

(தமது அன்பனான பார்த்தனது பிரார்த்தனையைச் செவியேற்ற பகவான் தமது விசுவ சொரூபத்தை யவனுக்குத் தரிசிப்பிக்கத் திருவுளங் கொண்டு அச்சொரூபத்தின் தன்மையை யொருவாறு அருளிச்செய்கின்றார்.)

"ஏ அர்ச்சுனா! அந்த எனது சொரூபம் எண்ணுதற்கரிய பலவித சுபாவங்களையுடையது. எண்ணுதற்கரிய நிறங்களையுடையது. கற்பனை செய்து ஒருவராலும் சிருஷ்டித்தறியவொண்ணாதது. ஆகாயத்தினும் விரிந்த சுபாவமுடையது. கண்பார்வையால் அளவிட்டறிய வொண்ணாதது. நாற்பத்தெட்டு மருத்துவரும், பனிரண்டு சூரியர்களும், எட்டு வசுக்களும், பதினொரு உருத்திரரும் என்னிடத்தே யுள்ளார்கள். யாவரும் காணப் பிரியங்கொள்ளும் அனேகம் உருவங்களும் என்னிடத்தே யுள்ளன. கருத்தோடு அவற்றை நீ காண்பாயாக" என்று அருளிச் செய்த பின், பகவான்,

அர்ச்சுனனது சாதாரணமான இரண்டு கண்களும் தமது சொரூபத்தைக் காணமுடியாவென்று கருதி அவனுக்கு ஞானக்கண்ணளித்து, தாம் அருளிபபடியே விசுவ சொரூபம் காட்டி நின்றார்.

(என்றிவ்வாறு திருதராட்டினருக்குக் கூறும் சஞ்சயர், பகவானது விசுவரூபத்தின் விசேடணங்களைக் கூறுகிறார்.)

அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளிய ஸ்ரீ கண்ணபிரான் அக்குருக்ஷேத்திரத்தில் கொண்டருளிய விசுவரூபத்தை ஒருவரால் இத்தகையதென வரையறுத்துக் கூறக்கூடுமோ? ("கூடாது-ஆயினும் ஒருவாறு சிறிது கூறுகிறேன்" என்றபடி.) தேன் சொரியும் மலர் மாலைகளும், பீதாம்பரம், சந்தம் முதலியவைகளையுமுடைய அச் சொரூபம் எல்லைகடந்து அநந்தமாய், எண்ணிறந்த பலகோடி சூரியர்கள் ஆகாயத்தின்கண் உதித்ததற்கு ஒப்பானதாகும்.

இன்னும் அந்த விசுவரூபத்தின்கண்ணே உள்ள தோள்களும், பாதங்களும் அனேகம். அழகுபெற அணியப்பட்ட ஆபரணங்களும் அனேகம். ஒளிபொருந்திய முகங்கள் அனேகம். வாய்கள் அனேகம். கைப்பற்றிய ஆயுதங்கள் அனேகம். அற்புதங்களும் அனேகம்.

பகவான் கொண்டருளிய அவ்வற்புதமான விஸ்வரூப கோலத்துள் எவ்வகைத் தன்மைகளையு முடையனவாகிய எல்லாப் பொருள்களையும் நேரே தரிசித்த அர்ச்சுனன், இனி நாம் ஈடேறினோம் என்று ஆனந்தத்தில் முழுகினவனாய் தான்செய்வதின்னதென அறியாதவனாகி, அச்சொருபத்தின் முன் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்தான். மனங்கரைந்து கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக புளகாங்கிதமுற்று, இரு கரங்களையும்

குவித்து அப்பரமேசுவரன் சந்நிதியில் நின்று பின்வருமாறு புகலலுற்றான் :—

"ஓ! தேவர்களாலும் பூசிக்கப்பெற்ற பரம்பொருளே! நீர் கொண்ட இந்த அற்புதமான விசுவரூப கோலத்தினுள்ளே ஒருவராலும் அளவு காணமுடியாத ஸ்தாவர ஜங்கம பொருள்களனைத்தும் பொருந்தியிருக்கக் கண்டேன். மும்மூர்த்திகளில் சிருட்டி கர்த்தாவாகிய நான்முகப் பிரம்மாவை முனிகணங்களோடும் கண்டேன். வாசுகி முதலிய நாகங்களைக் கண்டேன். தேவர்களின் கூட்டங்களையும் கண்டேன்.

ஏ பரந்தாமா! குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய மகுடமும், கதையும், சக்ராயுதமும் தரித்தருளி, சூரியனும் அக்கினியும் ஒன்றுகூடிய சோதியையொப்பான தமது விசுவரூபத்தின்கண்ணே அனேகம் கண்களும், உதரங்களும், புயங்களும், முகங்களும் உடைய அனேகம் வடிவங்களைக் கண்டேன். (தொடரும்.)

சீடன்.

உணவின் உயர்தர முறைமை.

உணவென்பது இங்கு உயிர்களின் அபிவிருத்திக்கு ஆதாரமான போஜனத்தைக் குறித்ததேயாம். அஃதொன்றின்பொருட்டே சகல வுயிர்களும் படாத பாடுகளைப் பட்டுவருகின்றன. இல்லாவிடில், ஒன்றும் எவ்வித வருத்தத்திற்கும் உட்படவேண்டியிராது; உயர்வு தாழ்வு என்கிற மதிப்பும் ஏற்படக் காரணமில்லை.

"சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்"

என்கிற முறைப்பாடும் வெளிவராது. "என் சிந்தை கெட்டுச், சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே" என்று வாய்விட் டரற்றவும் வழியுண்டாகாது.

சிறந்த வித்வானொருவன் குடிக்கக் கூழும் உடுக்கக் கந்தையுமின்றி ஒற்றைக் கோவணத்துடன் தேகமுற்றும் மயிரால் மூடப்பெற்றவனாய் ஊரூராயலைந்து புதுவையைச் சேர்ந்தானாம். அங்கு ஆனந்தரங்க பூபதியைக் கண்டாவது தன் குறையை நிவர்த்தித்துக் கொள்ளலாமென்றெண்ணி ஒரு நாள் அதிகாலையில் அப்பிரபுவின் வீட்டுக்குப்போய், அவரை வெளிவரின் காணலாம் என்று தெருத்திண்ணையின் ஒரு மூலையில் முழங்காலை மார்போடணைத்துக்கொண்டு, கைகளால் அம் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தானாம். வெளியே உலாவச்சென்ற பிரபு வீட்டுக்குத் திரும்பியவர் இம்மனிதனைக் கண்டு "இக்குரங்கன் யார்?" என்று தமது கைக்கோலால் சுட்டிக்காட்டி வினவினாராம். உடனே வித்வான்

"இவர்தான் பிரபுவா யிருக்கலாம்" என்று நினைத்து, எழுந்து நின்று "சுவாமி! அடியேன் ஸ்ரீ ராமபிரானால் அனுப்பப்பெற்ற குரங்கன். இங்கு சீதாபிராட்டி (இலக்ஷ்மி) இருக்கின்றாளோ இல்லையோ வென்று பார்த்துவரச் சொன்னார்" என்றானும்.

பிரபு தாம் கேட்ட கேள்விக்குத் தக்க சமாதானம் சொன்ன இவன் கேவலம் மூடாத்துமாவாயிரான். நல்லதிருக்கட்டும் என்று நினைத்தவராய்த் தமது பரிசாரகர்களில் ஒருவனை யழைத்து "இவருக்கு நாவிதனைக் கொண்டு க்ஷவரஞ் செய்வித்து, குளிப்பாட்டி, நல்லுடையணியச்செய்து, சாப்பிடவையுங்கள். உபசரிப்பதில் தாழ்வு ஏதேனும் நேரிடப்போகிறது. பிறகு என்னிடம் அழைத்துவாருங்கள்" என்று உத்தரவிட்டு, அவ்வாறே அவ்வித்வ சிகாமணியோடு கலந்துபேசி அவரால் கவிபாடப்பெற்று, வேண்டிய சன்மானத்துடன் அவரைக் கூட்டி யனுப்பினாராம். இப்படிப் பசிப்பிணியானது கவீச்வரர்களையும் வாட்டவல்லதென்றால் பிறரை யது என்ன செய்யாது. குலங் கோத்திரம், மானம் தானம், அறிவு, ஆண்மை, ஈகை யிரக்கம் முதலிய வெல்லாமிருந்தாலும் இப்பிணியண்டினால் அவை யாவும் எங்கேனும் பயந்தோடிப் பதுங்கிக்கொள்ளும்.

இத்தகைய கொடும் பிணியைக் குடிகெடுக்கவல்லது எது? அது, உணவேயாம். நாம் செய்யும் அளவற்ற தொழில்களும், கற்கும் கணக்கற்ற வித்தைகளும் அவ் வுணவின்பொருட்டேயன்றோ? அத்தன்மையான உணவின் வகைகளையும், பக்குவப்படுத்தும் வழிகளையும், இடங்களையும், உண்ணவேண்டிய ஒழுங்குகளையும், உரிய பாத்திரங்களையும், பலன்களையும் முன்னோர் விசிதமாகக் கூறியிருக்கின்றனர். இப்போது காலத்துக்கேற்ற கோலப்படி நாம் அவற்றைக் கவனியாது இஷ்டப்படி யொழுகிவருகிறோம். நம்மைப் பின்பற்றுபவராவது அத்தருமங்களில் ஈடுபட்டுய்ய அவற்றை யொருவாறு சுருக்கிப் பேசுவாம். அரிசி வகைகளில் 76 தினுசுகளுண்டு. அவற்றில் சம்பா அரிசியில் மட்டும் நாற்பதுக்கு மேற்பட்ட தினுசுகளுண்டு.

அவற்றால் சுத்தான்னங்கள், சித்ரான்னங்கள், பலகாரங்கள் முதலியவை செய்யலாம். இவற்றுளொன்றைக் கஷ்டப்பட்டு அடையப் பெற்றவரிற் சிலர் அதைப் பக்குவப்படுத்தும் ஒழுங்கை அனுசரிப்பதில்லை. காலம் அப்படி யிருக்கின்றது. நியாயமாகப் பார்க்கின், பாகசாலையானது 32 அடி நீளமும், 8 அடி அகலமும் கொண்டிருக்கவேண்டும். மேலே புகை முதலியவை தாராளமாகச் செல்லவும், அக்கினிக் குதவியான காற்று நன்றாயியங்கவும் புகைகூண்டு, பலகணி, நீர்த்தாரை முதலியவை அமைந்திருத்தல் வேண்டும். அறையை எப்போதும் சுத்தமாக வைக்கவேண்டும். இந்த அறையில் அக்கினி அல்லது இந்திரதிசையில் பரணி, கிருத்திகை முதலிய சுபதினத்தில் பசுவின் வால்போலும் செங்கல்லால் அல்லது களிமண்ணால் அடுப்பிடவேண்டும். இதனைத் தினந்தோறும் சாணங்கொண்டு மெழுகிக்

கோலமிட்டு, மலரிட்டுத் தொழுது நெருப்பை அடுப்பில் இடவேண்டும். இவ்வறையில் இருக்கவேண்டிய உபகரணங்கள் :—அக்கினி திசையில் தீபம் ; யமன் திசையில் விறகு ; வருணன் திசையில் நீர் ; வாயு திசையில் விசிறி ; நிருதி திசையில் முறம் துடைப்பம் ; குபேரதிசையில் தானியம், காய்கறி; ஈசானிய திசையில் உரல், உலக்கை, அம்மி; வலது பக்கம் பாக பாத்திரங்கள்.

சமைப்பவன் ரோகமில்லாதவனாய், தேகபுஷ்டியுள்ளவனாய், பதார்த்த லக்ஷணமறிந்தவனாய், நற்குலத்துதித்தவனாய் இருத்தல்வேண்டும். ஸ்நானஞ்செய்து அரையிலும், மேலும் சிறு துண்டு பூண்டு, சிகையைத்தட்டி அவிழாதபடி முடியிட்டு, நகசுத்திசெய்துகொண்டு சமையல் செய்யப் பிரவேசிக்கவேண்டும். இவ்வகையாயிருந்து சமைக்காத அன்னம் உண்பவரை நோயினராக்கி எண்வகை குற்றத்துட்படச்செய்யும்-அவை :—

1. அஸ்திரீதம்=கஞ்சி சுற்றிக்கொண்ட அன்னம் - ஆமயம் முதலிய ரோகந்தரும்.

2. பிச்சளம்=அளிந்த அன்னம் - குன்மாதிரோகந்தரும்.

3. அசுசி=புழு, மயிர்சேர்ந்த அன்னம் - வாய் நீரொழுக்கை யுண்டாக்கும்.

4. குவதிதம்=கருக்கரிசிபட்ட அன்னம்-அஜீரணமுண்டுபண்ணும்.

5. சுஷ்மிதம்=சிறிது வெந்தும் வேகாததுமான அன்னம் - இரத்தபீடனமுண்டாக்கும்.

6. தக்தம்=காந்திப்போன அன்னம் - இந்திரிய நஷ்டத்தை யுண்டாக்கும்.

7. விரூபம்=விறைத்துப்போன அன்னம் - ஆயுள் க்ஷீணத்தை யுண்டாக்கும்.

8. அநர்த்துஜம்=பழைய சாதம் - அதி நித்திரை, சீதாதிதோஷம் உண்டாக்கும்.

இலைக்கறிகள், காய்கள், பிஞ்சுகள், கனிகள், பயறுகள் இவற்றை ஐங்காயமிட்டு சமைக்கவேண்டும்.

போஜனவிதி:—சமபந்தியிலுண்போர் அன்னியரல்லாத சம ஜாதியராய், நியமாசாரமுடையோராய் இருத்தல்வேண்டும்.

இடம்:—வெளிச்சமுள்ளதாய், இதராள் புகாததாய், கோமயத்தால் மெழுகப்பட்டதா யிருக்கவேண்டும்.

உண்ணும் பாத்திரம்:—1. பொன், 2. வெள்ளி, 3. வெண்கலம், 4. வாழை இலை, 5. மா இலை, 6. புன்னை இலை, 7. தாமரை இலை, 8. இருப்பை இலை, 9. பலா இலை, 10. சண்பக இலை, 11. வெட்பாலை இலை, 12. பாதிரி இலை, 13. பலாசு இலை, 14. சுரை இலை, 15. கமுகமடல் இவற்றுள் ஒன்றுயிருக்கவேண்டும். இவற்றின் பலன்:—

1. சுக்ல விருத்தி, வாத பித்த சீதளசமத்துவம், உற்சாகம், சோபா ரோக நிவர்த்தி.

2. சிலேத்தும பித்த கோபத்தை நீக்கி, தேஜசு மகிழ்ச்சி என்பவற்றைத் தரும்.

3. சிக்கல், சோர்வு, இரத்தபித்தரோகம், என்பவற்றை நீக்கி, தாது விர்த்தி, வன்மை, இவற்றைத்தரும்.

4. தேஜசு, சுகபோகம் உண்டாம். மந்தாக்கினி, துர்ப்பலம், க்ஷீண வாத சிலேத்தும அரோசகம் இவற்றை நீக்கும்.

7. வெப்பம், வாதரோகம், மந்தாக்கினி இவற்றைத் தரும். சம்பத்தைப்போக்கும்.

9. குன்மரோகம், பித்தம் அதிகமாக்கும்.

மற்ற இலைகள் மத்திம பலனைத் தரும்.

பலவகையான பாலுள்ள மர இலைகள்:—பங்குவாதம், க்ஷயம், தாக ரோகம் இவற்றை நீக்கும்.

வெள்வாழையிலை:—உற்சாகந்தரும்.

"வாழையிலை அறுத்த அடிபாகத்தை வலப்பக்கம் வைத்துண்ண வேண்டும். உண்ணும்போது, இரண்டு கால்களையு முடக்கிக்கொண்டு இட முழந்தாளின்மேல் இட முழங்கையை யூன்றிக்கொண்டு பேசாமல் உண்ணவேண்டும். தரையில் ஆடையுடன் தென்முகமாக இருந்து உண்பவருடைய அன்னத்தை அரக்கர் உட்கொள்ளுவார்கள்.

இரண்டுவேளை போஜனமே உத்தமம். முக்கால் வயிறுதான் உண்ணுதல்வேண்டும். அன்னம், கறி அரை வயிறு. பால், மோர், ஜலம் கால் வயிறு.

"திண்ணம் இரண்டுள்ளே சிக்க அடக்காமல்
பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கப் போமே பிணி"

என்று ஆன்றோர் கூறியுளர்.

ம. இராஜகோபால பிள்ளை,
கோமளேசுவரன் பேட்டை.

நம்நாட்டுப் பூர்வீகத் துறைமுக வியாபாரம்.

நம் நாட்டின் பூர்வீக உண்மை நிலைமை இன்னும் நம்மவரில் அநேகர்க்குத் தெரியாது. இந்துதேச சரித்திரங்கள் என்ற பெயருடைய நூல்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படினும் அவற்றில் நம் நாடு முன்னிருந்த சிறப்புபொருந்திய நிலைமை கூறப்பட்டிருக்கவில்லை. எந்தெந்த விஷயங்களில் நம் முன்னோர் கௌரவம் பொருந்தி யிருந்தார்களோ, எந்தெந்த விஷயங்களை நாம் உணர்ந்தால் நமது கண்மூடித்தனம் ஒழிந்து நாம் கண் விழிப்படைந்து "சே! இனி நாம் இப்படி உறக்கத்திலிருக்கலாகாது. பூர்வ கௌரவ நிலையையடையவேண்டும்" என்று ஊக்கங்கொள்வோமோ, அத்தகைய விஷயங்களெல்லாம் சரித்திரங்களில் கூறப்பட்டிருக்கவில்லை.

மார்ஸ்டன், வின்கிளேர் முதலிய அன்னிய நாட்டார்கள் வரைந்துள்ள தேச சரிதங்களில் மேற்கண்ட விஷயங்களனைத்தும் மறைக்கப்பட்டு, "நம்முன்னோர் ஒன்றுமறியா மூடர்களாகவும் அநாகரீகர்களாகவுமேயிருந்தார்கள், நாம் மகம்மதியர் அரசாட்சியில் மிக்க குரூரமாய் நடத்தப்பட்டு மிக்க பரிதாபமான நிலைமையிலிருந்தோம். இப்போது ஆங்கில இராஜாங்கம் வந்தபிறகே நாகரீகமும், கல்வியறிவும், க்ஷேமமும், சுயாதீனமும் பெற்று விருத்தியடைந்து வருகிறோம்" என்ற அபிப்பிராயம் சிறு வயதிலேயே நம் மக்கள் மனதிற் பதிவதற்கு எவ்வாறு எழுதவேண்டுமோ அவ்வாறே தேச சரித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. மகம்மதிய இராஜாக்கள் அரசாண்டபோது அவர்கள் நாட்டிற்குச் செய்த நன்மையும், அவர்கள் செய்த அரிய செயல்களும் யாவும் மறைக்கப்பட்டு அவர்களில் கொடுங்கோன் மன்னராயிருந்தவர்கள் செய்த அக்கிரமங்களைப்பற்றி மட்டுமே அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது.

பூர்வீகத்தில் நெசவு முதலிய கைத்தொழில்கள் நம் நாட்டில் உன்னத நிலையிலிருந்தன வென்பது யாவரு மறிந்தவுண்மை. அதைப்போல் கப்பல் வர்த்தகம் நடக்கும் பல துறைமுகங்களும், கப்பல் கட்டும் துறைகளும் நம் நாட்டில் அனேகம் இருந்தன. ஔரங்கஜீப் சக்கிரவர்த்தி அரசாண்ட காலத்தில் அவர் இருநூறுக்கு மேற்பட்ட யுத்தக் கப்பல்களோடும், அனேகம் பீரங்கிகளோடும் அரக்கான்நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றிருக்கிறார். இத்தகைய சமாசாரங்களெல்லாம் மேற்கண்ட தேச சரித்திரங்களில் குறிக்கப்படவில்லை. பைத்தியம் பிடித்த ஒரு சக்கிரவர்த்தி ஜனங்களை வேட்டையாடிக் கொன்றான் என்றால் அதைப்பற்றி மட்டும் விபரமாகக் கூறப்பட்டிருக்கும்.

இந்தியாவின் பூர்வீகத் துறைமுகங்களையும் கப்பல்களையும்பற்றி "பம்பாய் கிரானிகல்" என்ற பத்திரிகையில் கூறியிருக்கப்பட்ட விஷயங்களைச் சுருக்கமாய் ஈண்டு கூறுகிறோம்.

"இந்தியாவின் கப்பல் வியாபாரப் பெருக்கைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குன்றிப்போகச்செய்து கடைசியில் அடியோடு துடைத்துவிட்ட காரணங்களையும் ஏற்பாடுகளையும் பற்றிய சரித்திரத்தை ஈண்டு விவரித்துக் கூறுவது அனுவசியம். இந்தியரின் பெருமையைக் காட்டும் அந்த க்ஷேம நிலைமை யழிக்கப்பட்டபோது ஒரு அம்சம் மட்டுமே அழியாமல் காப்பாற்றப்பட்டது. அது எதுவெனில் கப்பலில் மாலுமிகளாய்த் தொழில் செய்வதில் கைதேர்ந்த பலசாலிகளும், தைரியசாலிகளுமான ஜாதியார் மட்டும் நிலைத்து நின்றார்கள். அவர்கள் இங்கிலீஷ்காரர்களின் கப்பலுக்குஅவசியமானவர்களாகவும், குறைவான சம்பளத்திற்கு நன்றாக உழைப்பவர்களாகவும் இருப்பதால்தான் காப்பாற்றப்பட்டார்கள்.

இந்தியாவிற்குப் பெருந் தீங்கை விளைவித்த இக்காரியத்தைச் செய்தவர்கள் தங்கள் தேசாபிவிர்த்தியைக் கருதி யப்படிச் செய்ததால் அதையொரு குற்றமாக அவர்கள் கருதவில்லை. அப்படிச் செய்தும் 1854-55-ம் வருடம் வரையில்கூட "சுதேசக் கப்பல்கள்" இருந்துகொண்டிருந்தன. அந்த வருடம் பம்பாய், கல்கத்தா, சென்னை இத்துறைமுகங்களுக்கு வந்த சுதேசக் கப்பல்களின் தொகை பின்வருமாறு.

	கப்பல்தொகை.		கொள்ளும் பாரம்.
பம்பாய்	4899	...	185,700
கல்கத்தா	4447	...	445,000
சென்னை	3677	...	171,421

இக்கணக்கில் அப்போதும் ஏராளமான வர்த்தகம் நடந்துகொண்டிருந்த சின்னத் துறைமுகங்களின் கணக்கு சேர்க்கப்படவேயில்லை. பம்பாய் இராஜதானியில் மட்டும் பின்வரும் துறைமுகங்கள் இருந்தன:—

1. அலிபாக்
2. பேஸன்
3. புரோச்
4. பல்லார்
5. காரிங்கா
6. டொலாரா
7. கோகோ
8. கர்பண்ட்ஸ்
9. ஜம்போஸர்
10. கராச்சி
11. மாஹேனு
12. ஊல்பார்
13. ஓமர்கன்
14. பான்வெல்
15. இராஜ்பூரி
16. இரத்ணகர்
17. ஸூவென் துர்க் [கம்
18. சூரத்
19. தாராபூர்
20. திராம்பே
21. அன்ஜன்வெல்
22. விங்கோர்லா
23. விஜயதுர்க்கம்
24. வாக்ரா
25. வாரீ

இவ்வாறே மற்ற இராஜதானிகளிலும் இருந்தன. கடந்த நூற்றாண்டின் முற்பாதிவரையில்கூட இந்தியரால் நடத்தப்பட்டவையும் இந்தியர்க்குச் சொந்தமானவையுமான கப்பல்களே நம் நாட்டு முழு வர்த்தகத்தையும் ஆறுகளின் வழியாய் உள்நாட்டில் நடத்திக்கொண்டிருந்ததோடு, கடல் மார்க்கமாக நடந்த வர்த்தகத்தில் ஏறக்குறைய பாதியையும் இவைகளே நடத்திவந்தன.”

நேயர்களே! இப்போது நாம் இந்த விஷயத்தை யுணரவேண்டியதேன்? நம் பூர்வீகப் பெருமை யிப்படி யிருந்ததென்று மனமகிழ்வதற்கா அல்லது வாய்ப்பறை யறைவதற்கா? அதனாலென்னபயன்? “அத்தகைய உன்னத நிலைமை யடியோடு சீர்குலைந்து இப்போது எல்லாவற்றிற்கும் அன்னியநாட்டுதவியை யெதிர்பார்க்கும் நிலைமையிலிருக்கிறோமே. இது எத்தகைய வெட்கக்கேடான நிலைமை” என்று நம் மனதில் உறுத்தி, இனியேனும் நாம் அடிமைத்தொழிலில் ஆசைவைப்பதை அறவே விட்டு, நம் தாய்நாடு பழைய நிலைமையை யடைவதற்கு அனுகூலமான தொழில்களையே நம் ஜீவியத் தொழில்களாகக் கொள்ளவேண்டும் என்ற வைராக்கியங்கொண்டு அவ்வழியிலொழுகவேண்டும் என்பதற்கே இதை வாசித்துணரவேண்டும்.

ஓம்தத்ஸத்.

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

10-வது ஆண்டு.

நேயர்களே! அடுத்த ஆடிமீ நமது ஆனந்தனுக்கு 10-வது வருடம் பிறக்கப்போகிறது. முன் இரண்டு வருடங்களில் நடத்தியபடியே அடுத்த ஆனிமாத சஞ்சிகையை வி-பி-யிலனுப்பி 10-வது வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

முன்பண மனுப்புவோர் 1924ௗ ஜூன்மீ 15உக்குள் நமக்கு வந்து சேரும்படி யனுப்பக் கோருகிறோம். வி-பி-யில் சஞ்சிகை பெறுக்கொள்வதால் 3 அணா அதிகச்செலவும் வீண் ஆலசியமும் நேர்கிறதென்பது கவனிக்கத்தக்க விஷயம்.

அடுத்த வருடம் சஞ்சிகை வேண்டாதோர் 15-6-1924-க்குள் நமக்குத்தெரிவித்துவிட்டால் ஆனிமீ சஞ்சிகையை வி-பி-யிலனுப்பாமல்

சாதாரணமாகவே யனுப்பிவிடுவோம். அப்படிச் செய்யாது பேசாம லிருந்துவிட்டு, வி-பி வந்தபின் வாபீஸ் செய்து நமக்கு நஷ்டமுண்டாக்கி விட்டு "9-ம் வருட சந்தாவை நான் அனுப்பியிருக்க எனக்குக் கடைசிச் சஞ்சிகையை யனுப்பவில்லை" என்று குறை கூறுவதில் பயனில்லை. இதைநன்ருய்க் கவனிக்கக் கோருகிறோம்.

முன்பணமனுப்புவோரும் சஞ்சிகையை நிறுத்திவிட அறிவிப்போரும் மறவாமல் தங்கள் சந்தா நம்பரை யறிவிக்கவேண்டும். இதுகாறும் அதைக் குறித்துவைத்துக்கொள்ளாதவர்கள் வைகாசிமீ வரும் சஞ்சிகையின் மேல்உறையைக் கிழித்தெறியுமுன்பே விலாசத்தில் இருக்கும் சந்தா நம்பரை (1190 என்ற ரிஜிஸ்டர் நம்பர் அல்ல) மறவாமல் குறித்துக் கொண்டு அறிவிக்க வேண்டுகிறோம்.

இன்னொரு விசேடம்.

சந்தா நேயர்களில் பலர் சஞ்சிகையை மாதம் இருமுறையாக்கவேண்டுமென்றும், அல்லது பக்கங்களையேனும் அதிகப்படுத்தவேண்டும் என்றும் அதற்காகத் தாங்கள் சந்தாத் தொகையை யதிகப்படுத்தியனுப்பச் சித்தமாயிருப்பதாகவும் வரைகிறார்கள்.

முசிரி சாஸ்வதானந்த சபைக் காரியதரிசியாகிய நண்பர் ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா அவர்கள் தாம் 10-ம் ஆண்டு சந்தாவுக்காக ரூ. 1-8 அனுப்புவதாகவே வரைவதோடு எல்லாரையும் அவ்வாறே செய்யுமாறு வேண்டுகோள் ஒன்றும் வரைந்தனுப்பியுள்ளார். இச்சஞ்சிகையில் இடமில்லாததால் அதைப் பிரசுரிக்காததற்கு விசனிக்கிறோம்.

நம் நாட்டார்க்குப் பத்திரிகைகளில் இன்னும் போதுமான அபிமானம் உண்டாகவில்லையாதலின், மேற்கண்ட நண்பரைப்போல் எல்லாரும் நடந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கக்கூடவில்லை. நாடகம், பயாஸ்கோப் காட்சி முதலியவைகளுக்காக ஒரு வாரத்தில் செலவழிக்கும் பணத்தைச் சஞ்சிகைக்காக வருடமொருமுறை செலவழிக்கப் பின்னிடைகிறார்கள். இருக்கும் சந்தாதாரரில் அனேகர் வருடாரம்பத்தில் வி-பி-யை வாபீஸ் செய்துவிட்டுப் பின்னல் 1 ரூபாயனுப்பி மறுபடி சேர்கிறார்கள். இவ்வாறு ஆயிரம்பேர் வாபீஸ் செய்தாலும் சஞ்சிகை 1-க்கு 3 அணு வீதம் ரூபா 187-8-0 நமக்கு நஷ்டமாகிறது.

ஆதலின் சஞ்சிகையை யாதரிக்கும் சந்தா நேயர்கள் நமக்கு சந்தா தொகையை உயர்த்தியளிக்காவிடினும் இத்தகைய வீண் நஷ்டத்தை யளிக்காமல், ஒவ்வொருவரும் முன்பணமாய் சஞ்சிகையை யனுப்பிவிடவும், ஒவ்வொருவர் ஒவ்வொரு புது சந்தாதாரரைச் சிபாரிசு செய்யவும் முயற்சி யெடுத்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இவ்விஷயத்தில் நமக்குச் சற்றேறக்குறைய திருப்தியுண்டாகுமாறு நேயர்கள் மனம் வைத்துச் செய்வார்களாயின், நாம் இந்த சந்தாவுக்கே சஞ்சிகையின் பக்கங்களை (10-ம் வருடத்திலிருந்தே) அதிகப்படுத்தச் சித்தமாயிருக்கிறோம். சந்தாதாரர்கள் நமக்கு நஷ்டத்தை யுண்டாக்காதிருந்தால் அதுவே நமக்குப் பரிசளித்தமாதிரியாகும்.

பத்திராதிபர்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(358-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனோ:—அந்த ஆச்சரியத்தைப்பற்றி என்னிடம் கொஞ்சம் புலம் விடலாகாதா?

ஆன:—இப்போது ஒன்றும் கூறலாகாது அதோடு இச்சமயம் இன்னும் இரண்டு நிமிடம் தாமதிக்கக்கூட எனக்கு அவகாசமில்லை.

மனோகரன் இரண்டொரு நிமிடங்கள் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

ஆனந்தஸிங் உடனே பவானியை யழைத்துக்கொண்டு சுடலைக்குப் புறப்பட்டான். இருவரும் சென்று சவக்குழியருகில் போய் பார்த்த போது கதவு பூட்டப்பட்டிருந்தது இதனால் இடையில் யாரோ சவக் குழிக்குள் பிரவேசித் திருக்கிறார்களென்று விளங்கியது.

ஆனந்தஸிங் ஒரு நிமிடத்தில் தான் கொண்டுவந்திருந்த சாவிகளில் ஒன்றால் கதவைத் திறந்துவிட்டதே யிருவரும் உள்ளே பிரவேசித்தார்கள். சவப்பெட்டியின் மேல்மூடி மறுபடி திறக்கப்பட்டது. ஆனந்த ஸிங்கிடமிருக்கும் இராந்தலின் வெளிச்சத்தில் பவானி பெட்டியிலிருந்த சவத்தை மிக்க ஜாக்கிரதையோடு சோதனை செய்துப் பார்த்தாள்.

சுமார் ஐந்து நிமிடங்கள் வரை பார்த்துவிட்டுக் கடைசியில் ஆனந்த ஸிங்கை நோக்கி,

“இச்சவம் அம்பாலிகையின் சவமல்லவென்று நான் எத்தனைதரம் வேண்டுமாயினும் சத்தியம் செய்வேன். நேற்று எப்படியோ கலவரத் தால் மூட்டாள்தனமாய் ஏமாந்துபோய்விட்டேன்” என்றாள்.

ஆனந்தஸிங்குக்கு உடனே காலையில் படகிலிருந்த நிலைக்கண்ணாடி யில் தான் கண்ட அதிசயமான உருவம் நினைவிற்கு வந்தது.

அவன் பவானியை நோக்கி “இப்போது நீ கூறுவது சந்தேகமில் லாத உண்மையா?” வென்றான். பவானி “ஆம் உறுதியான உண்மையே” என்றாள்.

ஆனந்தஸிங்:—உனக்கு என்ன அத்தாட்சி யிருக்கிறது?

பவானி:—அவள் பிறந்தது முதல் நான் கூடவே பிரியாமலிருக்கிறே னென்று முன்னமே கூறியுள்ளேனல்லவா? அவள் தேகத்தில் சில குறிகள் இருந்தன. அவள் இறந்ததினத்திற்கு முன் தினம் கூட அவள் தேகத்தில் அவற்றைப் பார்த்தேன். சவம் இருக்கும் இந்த நிலைமையில்கூட அவற்றில் இரண்டொன்றாவது இருக்கவேண்டும். ஒன்றேனுமில்லை. நான் உறுதியாய்க் கூறுகிறேன், இது அவள் சவமேயல்ல.

அதற்குமேல் அங்கு நடந்த காட்சியை நாம் இங்கே கூறவேண்டுவ தில்லை. அவர்கள் குழியிலிருந்து வெளிவர அரைமணிக்குமுன், அவள் சவப் பெட்டியினருகில் கையில் பிடித்த இராந்தலோடு நின்று, “ஆகா! கட வுளே! எப்படிப்பட்ட மகா அக்ரமமான கொலைபாதகம் நடந்திருக்கிறது!” என்றாள்.

ஆனந்த:—“இப்போது உனக்கு முழு மோசமும் தெரிந்துவிட்டதல் லவா?” என்றான்.

பவானி:—ஆகா தெரிந்துவிட்டது. இச்சவம் மெய்யாகவே அம்பாலிகை யின் சவமாய் இருந்துவிடலாகாதா வென்று நினைக்கிறேன்!

ஆனந்தஸிங் “இப்போது இது அம்பாலிகையின் சவமல்லவென்று தெரிந்துவிட்டதல்லவா?” என்றான். பவானி “சற்றும் அய்யமின்றி” என்றாள். பிறகு இருவரும் அதைவிட்டுப் புறப்பட்டு நகரத்தை நோக்கித் திரும்பினார்கள்.

வழியில் பவானி ஆனந்தலிங்கை நோக்கி "அடடா என்ன ஆச்சரியம்! நான் முதலில் சற்று ஏமாந்துவிட்டேன். கடைசியில் அவளும் இவளும் ஒரே மாதிரியாய்த் தோன்றும் அம்சங்களெல்லாம் கூறி, ஒரே நிறமான செழித்து வளர்ந்த கூந்தலில் மட்டுமேயன்றி வேறொரு அம்சத்திலும் ஒற்றுமையில்லை" என்றான்.

ஆனந்த:—அம்பாலிகையின் தேகத்திலிருந்த குறிகளில் ஒன்றுகூட இசைவத்தின் மேலில்லையே?

பவானி:—ஒன்றேனுமில்லை. அதைப் பாராமலே நான் இது அம்பாலிகையின் தேகமல்லவென்று நிச்சயமா யறிந்துகொண்டேன். எதற்கும் ஒன்றிற்கிரண்டு அத்தாட்சிகளா யிருக்கட்டுமென்று அதையும் பார்த்தேன். பலதரம் பேசுவானேன். இது கட்டாயமாய் அம்பாலிகை தேகமல்ல; அம்பாலிகை உயிரோடிருக்கிறாள். அந்தோ சண்டாளனிடம் சிக்கிக்கொண்டு அவள் படப்போகும் பாட்டைவிட இறந்தேபோ யிருக்கலாமே என்று எனக்கு வேதனையா யிருக்கிறது.

ஆனந்:—"அவள் ஒருகாலும் அவனிடம் சிக்கிக்கொண்டிருக்கப் போகிறதில்லை" என்று கோபத்தோடு உறுதியாய்க் கூறினான்.

பவானி:—அய்யோ! அத்துவஷ்டர்களுடைய சூதும் தந்திரமும் துணிகரமும் உனக்குத் தெரியாது.

ஆனந்:—என்னுடையவைகளும் அவர்களுக்காவது உனக்காவது தெரியாது.

பவானி:—கடவுளே! நீ ஜெயமடைவதை என் கண்களால் காணுமட்டும் நான் உயிரோடிருப்பேனா?

ஆனந்:—அதைக் காண நீ அனேக நாட்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டுவதில்லை.

பவானி:—ஒருசமயம் நான் சில மணிகள் நேரங்கூட ஜீவித்திருக்க மாட்டேன்.

ஆனந்த:—ஏன்? நீ கூறுவதன் அர்த்தமென்ன?

பவானி:—கறுப்பண்ணனும் அவன் கூட்டாளியும் எந்த நிமிடத்தில் என்னைக் கொன்றுவிடுவார்களோ தெரியாது. லாயருடைய குமஸ்தா கொல்லப்பட்டதை மறந்துவிட்டாயோ?

ஆனந்த:—அப்படியானால் நான் வெளிவரும்படி கூறுகிறவரையில் நீ என் எங்காவது ஒளிந்துக்கொண் டிருக்கலாகாது?

பவானி:—இல்லை யில்லை. நான் அவர்கள் எண்ணங்களை உளவறிந்து வந்து உனக்கு உதவிசெய்யவேண்டும். இப்போது முன்னாடி யெச்சரிக்கை யடைந்திருப்பதால் மிக்க ஜாக்கிரதையாகவே யிருப்பேன்.

ஆனந்த:—நீ மிக்க தைரியசாலி.

பவானி:—தைரியசாலியல்ல. ஆனால் அம்பாலிகையைக் காப்பாற்றுவதாயின், என் உயிரையேனும் கொடுக்க ஆயத்தமா யிருக்கிறேன்.

ஆனந்தலிங் உன் ஆபத்து நெடுநாள் இருக்காது என்றான்.

மறுநாள் ஆனந்தலிங் மனேஜரைச் சந்தித்தான். (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

சந்தா நேயர்களுக்கு.

1923ஹு ஜூன்மீ 14உக்குள் வந்து சேரும்படி முன்னுடிச் சந்தா தொகையையனுப்பியவர்களுக்கு ஏற்கனவே நாங்கள் செய்திருந்த விளம்பரப்படி "இரக்தாக்ஷி வருஷத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்" 9-4-24-க்குள் அனுப்பிவிட்டிருக்கிறோம். பத்திராதிபர்.

ரப்பர் பாய்கள்.

இலங்கையிலுள்ள கொளும்பு ரப்பர் ஒர்க்ஸ் என்னும் கம்பெனியார் இப்போது ஒருவித ரப்பர் பாய்களைச் செய்திருக்கிறார்கள். அவை மெல்லியவையாயும் சுருங்குதல், உடைந்துபோதல் முதலிய குணங்களில்லாமல் தண்ணீரில் நனையாமலும், மடக்க, மடிக்க, சுருட்ட அல்லது கசக்கினும் கெடாததாய் இருப்பதாகவும், அவைகளைக் கீழே விரிப்பதால் வெல்வெட்டைப்போல் மிருதுவாக இருப்பதோடு காலைச் சறுக்கிவிடக் கூடாததாகவும் இருக்கிறது. அதிஜனப் புழக்கமுள்ள ஆபீசுகளிலும் பாடசாலைகளிலும் இவைகளை வாங்கி விரிப்பதால் சாதாரணமாக ஜனங்கள் நடந்து போவதால் உண்டாகும் சப்தம் வேலை செய்பவர்களின் காதில் படாமலிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

பக்ஷிகள் பறக்கும் தூரம்.

கழுகு மணி ஒன்றுக்கு 100 மைல்; நாரை 90 மைல்; அடைக்கலான் குருவி 90 மைல்; புறா 70 மைல்; காகம் 25 மைல்.

நாம் மறக்கக்கூடாத புள்ளிகள்.

இந்தியாவில் சோற்றுக்கு வழியின்றி பிச்சை யெடுத்து ஜீவனம் செய்பவர்கள் மொத்தம் 28,82, 641 பேர். பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் 28,18,506 பேர்.

ஒரு இந்தியன் சராசரி சொத்தின் மதிப்பு ரூ. 180. கனடாவில் ஒருவனது சராசரி ஆஸ்தி 4,400. இங்கிலாந்தில் ரூ. 6000.

இந்தியாவில் ஒவ்வொரு இந்தியனும் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்துவரும் சராசரி மூலதனம் ரூ. 25. இங்கிலாந்தில் ரூ. 640. கனடாவில் ருபா 510.

இந்தியாவில் மரண விகிதம் 30 பேர். இங்கிலாந்தில் 14 பேர். கனடாவில் 14 பேர்.

ஓர் அதிசய மீன்.

புதுவைக்குச் சுமார் 8 மைல் தூலைவிலிருக்கும் இங்கிலீஷ் இலாக்கா புத்துப்பட்டு எல்லை கடற்கரையில் ஓர் பிரமாண்டமான திமிங்கிலம் வந்து ஒதுங்கியிருக்கிறது. அது ஏறச்குறைய 25 கெஜ நீளமும், 7½ கெஜ அகலமும், கரைப்பக்கத்தில் ஒரு ஆள் உயரமும், கடல் பக்கத்தில் இரண்டாள் உயரமும் இருக்கிறது. இது மீன் வகையில் சேர்க்கப்பட்டதாயினும் குட்டிப் போடக்கூடியது. இதை நம்மவர் யானைவிழுங்கி மீனென்பார்கள். இம் மீன் ஒதுங்கிய நாள் முதற்கொண்டு இந்நாள் வரையில் அதைப் பார்த்த ஜனங்களுக்குக் கணக்கில்லை. இதைப் பார்ப்பவர்களுக்குச் சிருஷ்டிகருடைய மகிமை விளங்காது போகாது.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

இரக்தாக்ஷி௵ வைகாசி௴—கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847,
பசலி 1333—கோல்லமாண்டு 1099-1100—ஹிஜரி 1342,
இங்கிலீஷ் 1924௵ மே௴—ஜூன்௴

வைகாசி	மே	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	புத	தச32-3	பூர14-0	அமி60	மாடு முதலியவை வாங்க
2	15	வியா	ஏ27-23	உத்11-43	ம11-43சி	சர்வ மத்வ ஏகாதசி
3	16	வெ	து20-48	அஸ்7-10	அ7-40சி	விவாகம், நிஷேகம்
4	17	சனி	திர12 43	சித்1-58	மர1-58அ	நரசிம்ம ஜயந்தி, அவமா
				சுவா55-8		கம்
5	18	ஞா	சது3-43	விசா47-33	மர60	பௌர்ணமி, சம்பத்
			○54-0			கௌரி விரதம்
6	19	திங்	பிர44-13	அனு39-43	சித்60	தானியம் சேமிக்க
7	20	செவ்	துதி34-35	கேட்32-10	ம32-10அ	கரிநாள் [தீப கல்பாதி
8	21	புத	திரி25-50	மூல25-25	ம25-25அ	மிதுனாயனம், 21-3பார்த்
9	22	வியா	சது18-18	பூரா19-50	சித்60	கணிதாரம்பம் செய்ய
10	23	வெ	பஞ்12-18	உத்15-55	சி15-55ம	விவாகம், சீமந்தம் செய்ய
11	24	சனி	சஷ்8-3	திரு13-43	சித்60	கதிரறுக்க, யாத்திரை
12	25	ஞா	சப்5-40	அவி13-25	ம13-25சி	[செய்ய
13	26	திங்	அ5-20	சதை15-0	சி15-0மர	பிரயாணம் விலக்கல்
14	27	செவ்	நவ6-33	பூரட்18-15	ம18-15அ	கத்தரி, அபரணிநக்ஷத்திர
						முடிவு 35-35
15	28	புத	தச9-28	உத்-22-55	சி22-55ம	தானியம செலவிட
16	29	வியா	ஏ12-28	ரேவ-28-43	சி28-43அ	கரிநாள், சர்வ ஏகாதசி
17	30	வெ	து18-25	அசு35-18	அ53-18சி	கரிநாள்
18	31	சனி	திர23-53	பரணி42-25	சி42-25அ	மாச சிவராத்திரி
19	1924௵ ஜூன்௴ 1	ஞா	சது29-45	கிரு ✲49-48	சித்60	கிருத்திகை [க்ஷணம்
20	2	திங்	●35-43	ரோ57-13	அமி60	அமாவாசை-அரச பிரத
21	3	செ	பிர41-43	மிரு60	சித்60	
22	4	புத	துதி17-28	மிரு4-35	சித்60	
23	5	வியா	திரி52 50	திரு11-40	ம11-40அ	
24	6	வெ	சது57-20	புன18-13	சி18-13ம	
25	7	சனி	பஞ்60	பூச23-55	சி23-55ம	
26	8	ஞா	பஞ்0-50	ஆயி28-33	சி28-3 ம	
27	9	திங	சஷ்3 3	மக31-40	ம31-40சி	
28	10	செ	சப்3-38	பூர33-8	சி33-8 அ	
29	11	புத	அ2-18	உத்32-43	அ32-43ம	
			நவ50-3			
30	12	வியா	தச53-58	அஸ்30-28	சித்60	விவாகம், நாமகரணம்
31	13	வெ	ஏ47-20	சித்26-23	சித்60	மாடுவாங்க, கோடியுடுக்க
						மிதுனரவி நா 59-53

	புத	சூரி	சுக்
கே	24உ கும்-செ		
	25,, ரிஷ-புத		
செ			ராகு
	குரு	சனி	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.